# 4வது யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## சாரணர் குழு




# 84வது ஆண்டு நிறைவு மலர்

4 வது யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சாரணர் குழு

84ம் ஆண்டு

# நிறைவு மலர்

84th
Anniversary
Celebration
of Scouting &
Book Publishing



4th Jaffna
Jaffna Hindu College
SCOUT GROUP
**84th Year Commemoration Volume**

TROOP LEADER
4th JAFFNA SCOUT TROOP

# எங்கள் குழுச் சாரணர் கீதம்

சாரணியம் வாழ்க! யாழ் இந்து சாரணியம் வாழ்க
விழிப்போடு உதவி நற்பணிவுடன் கடமை
விளங்கும் எம் வாக்குறுதி – என்றும்
விளங்கும் எம் வாக்குறுதி

(எங்கள் சாரணியம்)

தூய்மை நற்நெறிவுடன் தோற்றி வைத்து
என்றும் தோழமை சோதரம் சிங்கனமும்
இன்முகத்தால் வழிகாட்டி – எங்கள்
மன்னவன் பேடன் பவல் உழைத்தார்

(சாரணியம்)

சாரணியம் போலே உலகினிலே வேறு
இயக்கங்கள் உளதோ இயல்பாலே
சேவையிலே தோற்றி சேவையிலே வளர்ந்து
நேசமோடு தேசம் வாழும் எம்மியக்கம்

(எங்கள் சாரணியம்)

குளிர் பனி மூடும் குறிஞ்சியிலும்
கொடு சிறுத்தைகள் வாழும் முல்லையிலும்
விருப்போடு நல்ல தொண்டாற்றி – எங்கள்
இருக்கையின் புகழினை ஏற்றிடுவோம்

(சாரணியம்)

அகன்ற நோக்கே அகமகிழ்வாகும்
ஆயத்தமாயிரு எம் மறையாமே
புரிகின்ற சேவையில் திகழ்கின்ற ஒளியில்
புகழ் வந்து சேரும் எம் சாரணியம்
எங்கள் சாரணியம் இந்து சாரணியம்

(சாரணியம்)

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர்கள் தமது எண்பத்து நான்காவது ஆண்டு விழாவைக் கொண்டாடு வதையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறேன். மலர் ஒன்றினை ஞாபகார்த்தமாக வெளியிடுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் அளிக்கிறது.

எமது கல்லூரியில் எண்பத்து நான்கு ஆண்டுகள் வரலாறு கொண்டது சாரணியம். வருடா வருடம் ஜனாதிபதி விருது பெறும் சாரணர்கள் எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துத் தருகின்றனர்.

பரீட்சைப் பெறுபேற்றில் முன்னணி வகிக்கும் மாணவர்களே ஜனாதிபதி சாரணர்களாகவும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர்.

நல்ல மனிதர்களை உருவாக்க சாரணியம் வழிகாட்டுகிறது. சாரண வாழ்வு எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களை நாட்டிற்கு உவந்தளிக்கும் என்பது எனது பூரண நம்பிக்கை.

சாரண ஆசிரியர்கள், சாரணர்கள் பாராட்டுக்குரியவர்கள். இந் நாளில் உனது உளம் நிறைந்த நல்லாசிகள் பல.

**அ. சிறிக்குமாரன்**
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

# ஆசிச்செய்தி

"எவ்வகை வாழ்வும் எழிலுற இயங்க இயக்கங்கள் இன்றியமையாதன" இதனை உணர்ந்த நம்முன்னோர் ஒவ்வொரு துறையிலும் இயக்கங்கள், சங்கங்கள் அமைத்து வளர்ச்சிப் பாதையில் எம்மவரை இட்டுச் சென்றுள்ளனர்.

அதேபோல் பிதாமகர் பேடன் பவல் பிரபு அவர்கள் இளம் சந்ததியினரைப் பற்பல படிகளில் உயர்த்த சாரணியகத்தை உருவாக்கினார். அதன் பயனாக இவ்வியக்கம் உலகின் பல திசைகளிலும் பரவலாயிற்று.

அதன் பெறுபேறாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் 1916ம் ஆண்டில் சாரணர் இயக்கம் உருவாக்கப்பட்டபோது பிரபல்யம் வாய்ந்த ஐந்து கல்லூரிகளில் சாரணர் குழுக்கள் தோன்றலாயிற்று. அவ்வாறு தோன்றிய மகத்துவம் மிக்க குழுக்களுள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழுவும் ஒன்றாகும்.

இவ்விதம் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட இக்குழு இந்தப்புதிய மிலேனியத்தில் தனது 84வது ஆண்டு நிறைவினைப் பூர்த்தி செய்வதையிட்டு மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்காலப்பகுதியில் இக்குழு சாதித்த சாதனைகள் பல திறமைமிகு சாரணர் தலைவர் களையும், சாரணர்களையும் உருவாக்கி மாவட்ட வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளது. பல இராணிச்சாரணர்களையும், ஜனாதிபதிச் சாரணர்களையும் உருவாக்கியுள்ளது. இக்குழு பங்குபற்றாத வருடாந்தப் பாசறைகளோ, ஜம்போறிகளோ இல்லையெனலாம். மாவட்டத்திலும் இலங்கையிலும் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி கேடயங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளது. சர்வதேச ஜம்போறிகளிலும் பங்குபற்றித் தனது முத்திரையைப் பதித்துள்ளது. வீறுநடை போட்டு வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் இக்குழு மேன்மேலும் வளர்ந்து யாழ் மாவட்டத்திற்கும் இலங்கைக்கும் சர்வதேச சாரணர் அரங்கில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவாறு தனது முத்திரையைப் பதிக்க இறையருள் இக்குழுவிற்குக் கிடைக்கவேண்டுமென ஆசிக்கின்றேன்.

**டோறஸ் வி. டு. இராசசிங்கம்**
**மாவட்டச் சாரணர் ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்**

# ஆசிச்செய்தி

4 வது சாரணர் துருப்பைத் தன்னகத்தில் தழைத்தோங்க வளரச் செய்துவரும் யாழ் இந்துக் கல்லூரிச் சாரணர் சமூகத்தினர் தமது 84வது அகவையை நிறைவுசெய்து வெளியிடும் மலருக்கு எனது ஆசியை வழங்குவது எனக்குக் கிடைத்த நற்பேறாகக் கருதி வாழ்த்தி. வழங்குகின்றேன்.

முன்பு யாழ் இந்துவின் வருடாந்த வெளிக்கள பாசறை விழாக்கள் யாழ் நகரின் சிறப்பு விழாக்களில் ஒன்றெனக் கருதி மகிழ்வோம். நாம் காணும் நிலைக்காட்சிககள், மைதானக் காட்சிகள், பாசறைப் பகுதிக் கண்காட்சிகள் அனைவருக்கும் வியப்பையும் விறுவிறுப்பையும் ஏற்படுத்தி இந்நாள் ஒரு பொன்னாளாகக் கருதுவார்கள். இத்துருப்புச் சாரணர்களுக்கு ஒரு ஒத்திகைப் போட்டிப் பயிற்சியாகவும் திகழும். அதாவது அடுத்து வருகின்ற மாவட்டப் பாசறைப் போட்டிக்கு களை கட்டுவது போன்ற தீவிரம் அனைவரிடமும் ஒளிர்விடும். மேலும் புதிய பிரதம விருந்தினர்கள் பிரமுகர்கள் வருகையினாலும் பெருஞ் சிறப்பைப் பெற்றுத் தந்துவிடும்.

இதில் வீரதீரச் செயல்களை வெளிக்காட்டிய சாரணர்கள் இராணிச்சாரண விருது பெற்றவர்கள் ஆகியோர்களது சகோதர நட்பை மட்டுமல்ல நெறிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளின் அறிமுகமும் எனக்கு ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் 1961 இல் முதன் முதலாக நல்லூரில் உற்சவகால தொண்டர் சேவையை அறிமுகம் செய்து வைத்த சாரணர் சேவையும், 1962 இல் கொழும்பில் நடைபெற்ற சாரணர் பொன்விழா ஜம்போறியில் யாழ் மாவட்டத்திலிருந்து கலந்துகொண்ட போதும் எனக்குக் கிடைத்த வாய்ப்பாகும். இத்தகையோரில் இங்கு ஒரு சிலரே எம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஏனையோர் வெளிநாட்டுப் பிரஜைகளாகி சிறப்போடு வாழ்கின்றனர்.

இவ்வகையில் உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் துருப்புத் தலைவர்கள் பழைய சாரணர்கள் மறக்கமுடியாதவர்கள். துருப்பின் அபரிமிதமான செயற்பாடுகளுக்கு துணையாக விளங்குவது இத்தகையோரின் அர்ப்பணிப்பான சேவையும் வழிகாட்டலுமேயாகும். சாரணியச் செயல் மேம்பாடுகளுக்கு வகுப்பறை போதனை மட்டும் உகந்ததல்ல. வெளிக்களப் பயிற்சி வனவாசப் பாசறை என்பனவையே சிறந்த பலனைக் கொடுக்கவல்லது என்பதனை நன்கறிந்து காலத்துக்குக் காலம் வெளிக்காட்டிய பெருமை யாழ் இந்துவுக்குரியது. வனவாசத்தை முடித்துத் திரும்பும்போது பயனுள்ள பெறுமதியான பல உயரமான கம்பங்களைச் சேர்த்துக்கொள்வார்கள். இவை வெளிக்கள விழா மாவட்டப் பாசறை விழாக்களுக்கு மிகப் பயனுள்ளதாகிவிடும். எனது நினைவில் நிறைந்த புகழ்பூத்த அதிபர்களாகிய அமரர்கள் இ.சபாலிங்கம், பி.எஸ்.குமாரசாமி ஆகியோர்களது காலங்களில் உப – விடுதி அதிபராக நான் இருந்த காலங்களில் இதனைக் கண்டுள்ளேன். வனவாசப் பாசறைக்கு அதிபர்கள் மிக உறுதுணையாக நின்றார்கள. 1980ல் என நினைக்கின்றேன் எங்கள் தலைவர் பயிற்றுனராகிய உ .மா.ஆ. அமரர் நா.நல்லையா அவர்களது நெறிப்படுத்தலில் 4வது யாழ் துருப்பினர் விசுவமடுவில் ஒரு பாசறையை அமைத்து வீரதீரப் பயிற்சிகளைப் பெற்றனர். அதில் நானும் ஒரு உதவியாளராகக் கலந்துகொண்டேன். ஒருநாள் இரவு எதிர்பாராத வகையில் திடீரென அமரர் பி.எஸ்.குமாரசாமி அவர்களோடு அப்போதைய பிரதம விளையாட்டுப் பகுதித் தலைவர் கப்டன் எம்.சோமசுந்தரம் நண்பன் க.பூபாலசிங்கம் வேறும் சிலருடன் வருகை தந்து யாவரையும் வியப்பூட்டி உற்சாகம் தந்தனர். வரவேற்று நன்றி தெரிவித்தோம். இதுவே இந்துவின் கடைசி வன் பாசறைப் பயிற்சி என நான் கருதுகிறேன். நம் நாட்டின் போர்ச் சூழல் தலைவிதியினால் அதுவும் யாழ் நகரோடு இணைந்து இருந்து வருகின்ற எமது சங்கத்தின் நிர்வாகப்பிரிவுகளில் 1986க்குப் பிந்திய காலங்களில் மிகவும் மோசமான நிலையை அடைந்தும் தொடர்ந்தும் இருந்து வருவதனால் இதுபோன்ற விழாக்களை நாம் இழந்துள்ளோம்.

மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய நண்பர் திரு. அருணாசலம் சிறிக்குமரன் அவர்களது செம்மனச் சிந்தனையோடு வழங்கி வரும் உதவி ஒத்தாசையோடு துருப்பினர் தமது செயற்பாடுகளில் தீவிரமாக உழைத்து வருகின்றனர். புதிய பாடத்திட்டத்தின்படி இவர்களுக்கு உறுதுணையாக இருந்து அணிப்பயிற்சி முறையில் ஊக்கப்படுத்தி வருகின்ற குழுச்சாரணத் தலைவர் நண்பர் திரு.மு.பா.முத்துக்குமாரு மற்றும் உதவி ஆசிரியர்கள் ஆகியோரது வழிகாட்டலோடு பயிற்சி பெற்று அதிக ஜனாதிபதி விருதுகளைப் பெறும் சாரணர்களை உருவாக்கி இந்துவுக்குப் பெருமை தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி நல்லாசி கூறுகின்றேன்.

*"வாழ்க சாரணியம் வளர்க நற்சமூகம்*
*வையகம் துலங்கிட என்றும்"*

திரு.சு.ஏகாம்பரநாதன்
உதவி மாவட்ட ஆணையாளர்
( யாழ்ப்பாணம்)

# மலரும் மலரின் இதழ்களிலிருந்து .....

அர்ப்பணிப்புக்கோர் அடையாளமாய், யாழ் இந்து அன்னையின் தலைக்கழகமாய் மிளிரும் எம் சாரணியத்தின் மலரொன்று நெடுநாள்களின் பின் மலர்வதையிட்டு சாரணர்களாகிய நாமனைவரும் உளம் பூரித்து நிற்கின்றோம்.

கால நதியின் ஓட்டத்திலேற்பட்ட சோதனைகளின் மத்தியிலும் பல்வேறுபட்ட சாதனைகளைப் படைத்து நிற்கின்றது எமது துருப்பு. குறுங்கால முயற்சியில் சிறப்பான முறையில் இம்மலர் மலர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

இப்பாரினில் எந்தவொரு அமைப்பும் எம் சாரணியத்துக்கு நிகராகாது. வாழ்வெனும் நெடும்பெரும் பயணமதை நன்நே நெறிப்படுத்த வழிகாட்டுவதே எமது ஒப்பற்ற சாரணிய இயக்கமாகும். சாரணன் வேறெந்த மானிடனுக்கும் வழிகாட்டியாக விளங்குபவன். சாரணிய வாழ்வு பல்வேறுபட்ட சோதனைகளையும் வேதனைகளையும் போக்கி ஒற்றுமையாகிய பேரின்பத்தில் ஆண்டவனைக் காணும் வழிமுறையைக் காட்டுகின்றது. சாரணியமும் மானிட வாழ்க்கையும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்தவை.

மனத்தினில் உறுதியையும் , வாக்கினில் தூய்மையையும், மெய்யால் நல்லனவற்றயையும் செய்யத் தூண்டும் சாரணியம் எனும் மாநதியின் பெருமை அளவிடக்கரியது. ஒன்பது தசாப்தங்களுக்கும் மேலாக உலகின் பெரும்பாலான நாடுகளில் வேரூன்றி வளர்ந்து நிற்கும் இவ்வியக்கமானது என்றும் தழைத்தோங்கி நிற்கும் என்பது திண்ணம்.

சாரணன் என்பவன் பத்து விதிகளுக்கு அமைந்தவன். எதற்கும் அஞ்சாத நெஞ்சம் அவனிடம் இயல்பாகவே வளர்ந்து வருகின்றதொன்று. சாரணனானவன் எதையும் சாதிப்பதற்குத் தயங்கமாட்டாதவன். இப்படிப்பட்ட தன்மை வாய்ந்த, வாழ்விலே அச்சம், மடமை, ஆசை எனும் தளைகளை படிப்படியாக அகற்றி மானிடமென்கின்ற பேரொளியைப் பரப்பும் பெருவிளக்கே சாரணியமாகும்.

மலரின் மலர்ச்சியில் பங்காற்றிய அனைத்து நெஞ்சங்களுக்கும் மீண்டும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**என்றும் பவலின் வழியில்,**

செல்வன். வி. திருக்குமரன்
செல்வன். வி. விபுலன்
செல்வன். ச. பாரதி

# OUR PRINCIPAL




**A.Srikumaran**
B.A. (Cey), Dip. in Ed, S.L.P.S. (I)

## OUR DEPUTY PRINCIPAL



**Mr. P. Makeshwaran**
B.Sc. (Maths Hons – Col),Dip.in.Ed..

## OUR GROUP SCOUT LEADER



**Mr.M.B. Muthukumaru**
(Spl. Trd. Maths)

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும்
(வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளமகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே – பல
கலைமலி கழகமும் இதுவே – தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே!
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவை பயில் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெருங் கலைகயம் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு!

அன்பான சாரணர்களுக்கு,

நீங்கள் சாரணியத்தில் இணைவதற்கு பல பலகாரணங்கள் இருந்திருக்கலாம், சாரணர்களின் சீருடையினால் கவரப்பட்டிருக்கலாம். அவர்கள் பயிற்சி பெறுவதைப் பார்த்து அதனால் ஈர்க்கப்பட்டிருக்கலாம். அவர்களின் உற்சாகமான செயற்பாடுகளைக் கண்டபின் நீங்களும் அவ்வாறே இருக்கவேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டிருக்கலாம்.

காரணங்கள் எதுவாக அமைந்தாலும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். ஏனெனில் சாரணியம் உங்களை ஒரு முழு மனிதனாக, வாழ்க்கைச் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஒருவராக உருவாக்கப் போகின்றது. நல்ல ஆளுமை பொருந்திய அறிவும் ஆற்றலும் மிக்கவராக அமைவீர்கள் சாரணியத்தின் செயற்பாடுகள் எவ்வாறு இத்திறன்களை வளர்க்கின்றன என்பதனைச் சுருக்கமாக இம்மடலில் கூறப்போகின்றேன்.

அங்கத்துவச் சின்னம் சூட்டி உங்களை வாழ்த்துகின்ற பொழுதினில் நீங்கள் அகமகிழ்ந்து உங்களின் ஒரு ஆவல் பூர்த்தியடைந்த பூரிப்பில் ஆழ்ந்திருப்பீர்கள். இந்நிகழ்வுடன் உங்கள் சாரணியப் பயணம் ஆரம்பமாகின்றது, ஆளுமை உருவாக்கத்தில் நல்லதொரு மைல் கல்லாக அமைகின்றது. ஒவ்வொருபடி ஏறுகின்றது.

பாசறை அமைத்து நீங்கள் ஆடல் பாடலில் ஈடுபடுவதனால் உங்களின் மேடைக் கூச்சம், மக்கள் முன் தோன்றும் அச்சம் போன்றவை அகன்று மேடையிடல், கூட்டத்தில் தோன்றி பேசக்கூடிய துணிவினைப் பெறுகின்றீர்கள். இவ்வாற்றலினை விருத்திசெய்யாதோர் சிலசமயங்களில் தாழ்வுச் சிக்கலுக்குள்ளாகின்றனர், வகுப்பில் முன்வாங்கிலிருப்பதற்குக் கூட கூச்சப்படுவர். புதிய ஆடைகளைக்கூட அணிந்து வெளியில் செல்லத் தயங்குவர்.

சாரணியத்தில் நீங்கள் உணவு சமைக்கின்றீர்கள், நீந்தக் கற்றுக் கொள்கின்றீர்கள், தோட்டம் அமைக்கின்றீர்கள், இவையும் வாழ்க்கைக்கு உதவுவன. ஆக்கத்திறன் விருத்திக்குச் சித்திரப் பயிற்சியும் ஒழுக்கநெறிக்கு அணிநடை போன்றவையும் சாரணியத்தில் ஊக்குவிக்கப்படுகின்றன. துணிச்சல், வீரம், போன்றவற்றை மேம்படுத்துவதற்கு நடைப்பயணம், வெட்டவெளி வாசமென்பன உதவுகின்றன. அண்மையில் கொக்கா கோலா (Coca Cola) நிறுவனத்தினர் தமது உயர்மட்டப் பணிப்பாளர்களின் மனவுறுதிக்கு ஓர் உந்துதல் கொடுக்க விரும்பினர். அதற்கேற்ப பல பயிற்சிகளை வழங்கினர். அவற்றில் எதிர்பாராத தடைகளுக்கு முகங்கொடுப்பதும் ஒன்றாகும். நிலக்கரி நெருப்புத்தணல் தயாரித்து அதன்மீது அவர்களை நடக்கும்படி பணித்தனர். இந்நிகழ்ச்சி எமது பிரதேசத்தில் கோவில்களில் நடக்கும் தீக்குளிப்பினை எமக்கு நினைவூட்டுகின்றதல்லவா! பயிற்சியின் நோக்கம் யாதெனில் புதிய எதிர்பாராத தடைகள் பற்றிய பயப்பிராந்தியத்ததை அகற்றி, எத்தகைய இடரையும் தாண்டும் துணிச்சலை வளர்த்தலாகும். சாரணியத்தில் இதேபோன்ற பல பயிற்சிகள் உண்டு என்பதனை நீங்கள் அறிவீர்கள் உயர்மரங்களில் ஏறுதல், அவற்றில் காவலரண்கள் அமைத்தல், தனிமையில் பாசறை அமைத்தல், முன்தெரியாத தனிப்பாதைகளில் பயணம் செய்தல் என்பன சிலவாகும். இதன்மூலம் உங்களின் மனவுறுதியும் தன்னம்பிக்கையும் வளர்கின்றன. இவை சவால்களை உறுதியுடன் எதிர்கொள்ளும் ஆற்றலை உங்களுக்குக் கொடுக்கின்றன.

உங்கள் துருப்பின் செயற்பாடுகள், அதில் காணப்படும் இறுக்கமான ஒழுங்கு, தீர்மானங்களை அமுல்படுத்தும் முறை ஆகியன பரமுகாமைத்துவப் பண்புகளை உங்கள்பால் உருவாக்குகின்றன. குழுவாகத் திட்டமிடுகின்றீர்கள், தீர்மானங்களை ஒன்றாக எடுக்கின்றீர்கள், வேலையைப் பகிர்ந்து கொடுக்கின்றீர்கள், இவ்வமுலாக்கலின்போது மேற்பார்வை செய்யப்படுகின்றீர்கள். தொடர்பாடலில் ஈடுபடுகின்றீர்கள், கூட்டாக வேலைசெய்யப் பழகுகின்றீர்கள், பல படிகளில் இயங்கும் சாரணத்தலைமைகளின் பணிப்புரைக்குக் கட்டுப்படுகின்றீர்கள் எனப் பல முகாமைத்துவச் கூறுகளைச் செயற்படுத்துகின்றீர்கள். இதன் பேறாக உங்கள் தலைமைத்துவப் பண்புகளும் வளர்ச்சியடைகின்றன.

நீங்கள் அங்கத்துவச் சின்னம் சூட்டப்பட்டதிலிருந்து உச்சக் கட்டமாக ஜனாதிபதி விருது பெறப்படும் வரை பெறும் பயிற்சிகள் அனுபவங்கள் யாவும் உங்களை நல்ல ஆளுமை பொருந்திய ஒரு மனிதனாக மாற்றுமென்பது திண்ணம்.

*உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்.*

அன்புள்ள
அ. பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர் யாஇக)

# OUR SCOUT LEADERS



**Mr.S.Kokilan**
Scout Leader



**Mr.M.Jotheeswaran**
Scout Leader



**Mr.S.Ganga**
Asst. Scout Lrader

# வரலாறு படைத்துவரும் சாரணர் குழு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சாரணர் குழு மிகவும் பழமையானது. யாழ்ப்பாணத்தில் சாரண இயக்கம் முதன் முதல் நான்கு பாடசாலைகளில் தான் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நான்கு பாடசாலைகளில் யாழ் இந்துக்கல்லூரியும் ஒன்றாகும். எனவே ஆரம்பமே வரலாறு படைப்பதாக அமைந்து விட்டது. அன்று முதல் இன்று வரை இக்கல்லூரியின் சாரணர் குழு துடிப்புடனே தான் இயங்கி வருகின்றது. நான் இக்கல்லூரியில் மாணவனாக இருந்த காலம் தொட்டு இன்று வரையுள்ள காலப்பகுதியில் மனதில் பதிந்ததை பசுமையாக இருப்பதை மட்டுமே எழுத விரும்புகின்றேன்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையைத் திறந்து வைப்பதற்காக இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா வந்த போது அவருக்களிக்கப்பட்ட மரியாதை அணிவகுப்பில் எமது கல்லூரிச் சாரணர் குழு முக்கிய பங்கேற்றது. இந்த நிகழ்வு வரலாற்று நிகழ்வாகும். இது போல் சேர்.ஜோன் கொத்தலாவளை வந்த போதும் மரியாதை அணிவகுப்புக் கொடுக்கப்பட்டது. முக்கியமான பிரமுகர்களுக்கு மரியாதை அணிவகுப்புக் கொடுக்கப்படும் போது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் குழு முக்கிய பங்கேற்பது வழமையாகும்.

மனதில் மிகவும் துன்பமான நிகழ்வும் நினைவு வருகின்றது. கல்லூரி அதிபர் அ.குமாரசுவாமி அவர்கள் திடீரென்று காலமான போது இக் கல்லூரிச் சமூகமே கலங்கியது. இறுதி யாத்திரையின் போது கல்லூரி சாரணர் குழு மிகவும் வேதனையோடு அணிவகுத்துச் சென்றது மறக்க முடியாததொன்றாகும். இளைப்பாறிய அதிபர்கள் சபாரத்தினம், டி.எஸ்.குமாரசாமி ஆகியோரின் இறுதி யாத்திரைகளிலும் சாரணர் குழு பங்குபற்றியது. கல்லூரி ஆசிரியர்கள், அதிபர்கள் காலமாகிய காலத்தில் சாரணர் குழு மரியாதை அணிநடை செய்வது குறிப்பிடத் தக்கதாகும்.

யாழ் இந்துக்கல்லூரியின் அபிவிருத்தி நிதிக்காக நடாத்தப்பட்ட களியாட்ட விழாக்களில் எமது சாரணர் குழு முக்கிய பங்கும் தொண்டுமாற்றி வந்திருக்கிறது. களியாட்ட விழாவில் தினமும் பிரதம விருந்தினரை வரவேற்கும் கோலாட்டக் குழு சாரணர் குழுவாகவே அமைந்தது. மிகவும் புகழ் வாய்ந்த நாடகங்களை சாரணர் குழு மேடையேற்றிப் பாராட்டுப் பெற்றது.

யாழ் மாவட்ட வருடாந்த பாசறைகளில் கல்லூரியின் குழு பங்குபற்றி பல முதலிடங்களைப் பெறுவது சர்வ சாதாரணமான நிகழ்ச்சியானது. பழைய பூங்கா, கிளிநொச்சி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பனவற்றில் நடாத்தப்பட்ட வருடாந்த பாசறைகளில் கல்லூரி முதன்மை பெற்றுப் பெரும்புகழ் ஈட்டியது குறிப்பிடத்தக்கதாகும். அகில இலங்கைப் போட்டிகளிலும் முதன்மை பெற்றது. வருடாந்த சேவை வாரத்தில் மிகக் கூடிய தொகையினை உழைத்து இலங்கையிலேயே முதலிடத்தை பலதரம் தட்டிச் சென்றுள்ளது. மிகக்கூடிய இராணிச் சாரணர்களை, ஜனாதிபதிச் சாரணர்களை உருவாக்கி வரலாறு படைத்தது.

எமது கல்லூரியின் புகழ்பூத்த சாரண ஆசிரியர்கள் பலர். எனது மனதில் பதிந்த ஜெயவீரசிங்கி, இராசையா, சிவராசா, சிவசுப்பிரமணியம் போன்றோர் பலர். அவர்களது சேவை மகத்தானது. முத்துக்குமாரன் வழிநடத்தலில் சாரணர் குழு பல முதன்மை நிலைகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவனும் கல்விப்பணிப்பாளரும், இலண்டனில் பயிற்றப்பெற்றவருமான சிவா.சோமசேகரம் மாவட்ட சாரண ஆணையாளராக இருந்தவர். அவருக்குப்பின் -- நீண்ட காலத்திற்குப் பின் யாழ் மாவட்ட சாரண ஆணையாளராகும் பேறு எனக்குக் கிடைத்தது. திருவாளர்கள் முத்துக்குமாரர், சிவசுப்பிரமணியம் ஆகியோர் உதவி ஆணையாளர்களாக கடைமையாற்றியவர்கள். நல்லையா அவர்கள் புகழ்பூத்த உதவி சாரண ஆணையாளராகக் கடமையாற்றி வரலாறு படைத்தவர். இன்று உதவி மாவட்ட ஆணையாளராக விளங்கும் தேவரஞ்சன், தவகோபால் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எமது கல்லூரிக் குருளைச் சாரணர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சிவநேசராசா ஆசிரியர் வழிகாட்டலில் முதன்முதல் "ரோரம்போல்" பெற்ற நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். அன்றுமுதல் குருளைச் சாரணர்கள் பல வெற்றிகளைப் பெற்று புகழ்பெற்றனர்.

எமது கல்லூரியின் "மூத்த சாரணர்" எனப் புகழப்படும் பழைய மாணவர் கனகராசா ஐயா அவர்களை குறிப்பிட்டேயாக வேண்டும். எமது சாரணர் பலர் பல்வேறு துறைகளில் புகழ்பெற்றவர்களாக இருந்திருக்கின்றனர். இயன்றவரை அவர்களைப் பற்றிய குறிப்புகளைத் திரட்டி ஆவணப்படுத்த வேண்டும். இது எமது சாரணர் குழுவிற்குப் பெருமை சேர்க்கும்.

"கல்லூரியில் சாரணியம் மேன்மேலும் வளர ஆண்டவன் அருள் புரிவாராக"

**சுடர். இ. மகேந்திரன்**
**இளைப்பாறிய அதிபரும்**
முன்னாள் சாரண மாவட்ட ஆணையாளரும

# சாரணியமும் நினைவுகளும்

யாழ் இந்துக்கல்லூரியில் திரு. ஆசைப்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்த காலம் 1960ம் ஆண்டுகளில் நாலாம் வகுப்பில் சேர்ந்த வருடமே குருளைச் சாரணர் குழுவில் சேர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் காலத்தில் அதற்குப் பொறுப்பாக இருந்தவர் யாழ் மாவட்ட சாரண ஆணையாளராக இருந்த திரு.சுடர்.மகேந்திரனின் சகோதரர் திரு.இ.சிவனேஸ்வரராஜா அவர்கள் எமது வகுப்பாசிரியரும் அவரே ஆவார். எமக்கு தமிழ், சமயம் ஆகிய பாடங்களும் எடுத்தவர்.

அவரிடம் சின்னம் சூட்டப்பட்டதனால் ஒரு சர்வதேச அமைப்பில் ஓர் அங்கத்துவம் பெற்றதுடன் கனிஷ்ட சாரணனாகி பின் சிரேஷ்ட சாரணனாகி அணித்தலைவர், துருப்புத்தலைவர், பின் பாடசாலை முடிவடைந்ததும் திரி சாரணர் குழுவில் அங்கத்துவம் பெற்று பின் யாழ் மாவட்ட திரிசாரணர் தலைவராகியதுடன் 1974ம் ஆண்டு தை மாதம் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது சேவையாற்றியமைக்காகத் "தொண்டுள்ளம்" எனும் சான்றிதழ் கிடைக்கப்பெற்றோம்.

கனிஷ்ட சாரணனாக மரங்கொத்தி அணியில் சேர்ந்த உதவி அணித் தலைவராகவும் பின் அணித்தலைவராகவும் இருந்த காலத்தில் சாரணிய ஆசிரியராக திரு.V.சிவசுப்பிரமணியம் அவர்கள் எமக்கு நல்வழிகாட்டியாக இருந்தார் அது இன்றும் பசுமையாக எம் நினைவில் உள்ளது. அவர் தற்போது சிசிலித் தீவில் இருந்து கடிதத் தொடர்பு கொண்டுள்ளார். அதன் பின்னர் அமரர் M.முத்துக்குமாரன் அவர்களை குழுத்தலைவராகக் கொண்டு எமது குழு இயங்கி வந்தபோது அகில் இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிக் கிண்ணங்கள், வெற்றிக் கேடயங்கள் பல பெற்றமையும், யாழ் மாவட்டத்தில் பல பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றிக் கேடயமான ரோட்டரிக் கேடயத்தினைப் பல தடவை வென்று வெற்றிவாகை சூடிக்கொண்டோம். அமரர் முத்துக்குமாரர் அவர்கள் தென்மராட்சியில் நாம் இடம்பெயர்ந்திருந்த காலத்தில் சிவபதம் அடைந்தார். அன்னாரின் இறுதி யாத்திரையில் சாரணர்கள், சாரணத் தலைவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

திரிசாரணர்களின் ஆகக்கூடிய தகைமையான நான்கு நட்சத்திரங்களில் ஒன்றான திரிஉலாத் தாரகை பெறுவதற்கு துவிச்சக்கரவண்டியில் 240 மைல் பிரயாணத்தை மேற்கொண்டு செல்வதற்கு என்னால் ஒழுங்கு செய்யப்பெற்றபோது யாழ் இந்துக்கல்லூரியிலிருந்து மூன்று திரிசாரணர்கள் பங்குபற்றி மிகத்திறம்படச் செயற்பட்டமை இங்கு குறிப்பிடப்படவேண்டியது. யாழ் இந்துக்கல்லூரியில் பயிற்றுனர் தலைவர் அமரர் நா.நல்லையா அவர்கள் குழுத்தலைவராக இருந்த காலம் சாரணியம் மிக நன்கு வளர்ச்சியடைந்து சமூகத் தேவைகள் அனைத்திலும் யாழ் இந்து சாரணர்கள் பங்குபற்றி பெருமையைக் கல்லூரிக்குத் தேடித்தந்தார்கள். அவருடைய காலத்தில் யாழ்.இந்துக்கல்லூரியில் கடற்சாரணர் குழு ஆரம்பித்து இவ்வருடம் அவர்கள் 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது பெருமையாகவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் யாழ்.பரியோவான் கல்லூரியிலும் யாழ்.இந்துக்கல்லூரியிலும் தான் கடற்சாரணியக் குழு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய கல்லூரிகளிலும் இக்குழு ஆரம்பிப்பது நன்மைபயக்கும். அமரர் க.சச்சிதானந்தம் (உ.மா.ஆ) அவர்கள் கல்லூரிக்கு வந்து தனது பிரிவான திரிசாரணர் குழுவை ஆரம்பித்து வைத்தார். பிற்காலத்தில் 18 வயதுடைய மாணவர்கள் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கும் பல்வேறு காரணங்களால் நீங்கியமையால் தொடர்ந்து அப்பிரிவு இயங்க முடியாது போய்விட்டது. திரிசாரணர் குழுத்தலைவராக இருந்த என்னை உதவி மாவட்ட ஆணையாளராக நிர்வாகத்திற்கு 1980ம் ஆண்டு பொறுப்பேற்று தற்போது உதவிப்பயிற்றுனர் தலைவராக வளர்ச்சியடைவதற்கு யாழ்.இந்து சாரணர் குழு எனக்கு அத்திவாரம் இட்டுத் தந்தது மட்டுமல்ல ஆசிரியர் இ.சிவனேஸ்வராஜா அவர்களிடம் கற்ற தமிழ்ப்பாடத்தின் விருப்பத்தினால் உலகத் தமிழ்ப்பண்பாட்டு கழகத்தின் இலங்கைச் செயலாளராகவும் 1989ம் ஆண்டு மொறிசியசில் நடைபெற்ற மாநாட்டில் "சிவநேயர்" என்னும் பட்டமும் பதக்கமும் பெற உதவியதுடன் உலக இந்து இளைஞர் பேரவையின் இலங்கைச் செயலாளராகவும் செயற்படுவதற்கும் நான் பயின்ற சாரணியமே எனக்கு என்றும் உதவியது. சமூகத்திற்கும் சூழலுக்கும் உதவிசெய்ய வேண்டுமெனத் திரு.மா.புவனேந்திரன் அவர்கள் யாழ்.இந்துவின் சாரணிய குழுத் தலைவராக இருந்தபோது வருடாந்தம் தோறும் மரம்நாட்டு விழாவை நடாத்தி ஏனைய பாடசாலைகட்கு மரக்கன்றுகளை வழங்கி சாரணர்களை நாட்டுப் பற்றுள்ளவராக்கியமை மறக்க முடியாதவை.

**இ.தவகோபால்**

உதவி மாவட்ட சாரண ஆணையாளர்

# INSTRUCTORS



**Mas. M.Babugi**
- President Scout -



**Mas. N. Nagaratnam**
- Efficency Decoration -

# EDITORS



**Mas.V.Thirukkumaran**
- Efficency Decoration -



**Mas.V.Vipulan**
- Efficency Decoration -



**Mas.S. Barathy**
- Efficency Decoration

# ஓநாய்களும் ஓநாய்க் குருளைகளும்

சாரண இளைஞா் படையினைச் சேருவதற்குத் தக்க பராயமடையாத இளஞ்சிறார்களே ஓநாய்க் குருளையர் என அழைக்கப்படுகின்றார்கள் (Wolf Cubs) சாரணர் ஓநாய்கள் என அழைக்கப்படுகின்றார்கள்.

செவ்விந்திய சாகியத்தியர் யாவரும் சாரணியத் தொழிலில் சிறந்தோராய் இருப்பர். குறிப்பாக ஆபிரிக்காவின் சாலு, மாடாபிளி, சுவாசிஸ் போன்ற இடத்திலுள்ளவர் திறமையான சாரணிகள் ஆவர். இதற்குக் காரணம் இளஞ்சிறாராக இருக்கும் போது சாரணியத்திலுள்ள ஈடுபாடே ஆகும்.

ஆடவர் யுத்த முனைக்குச் செல்லும் போது இளஞ் சிறார்களும் கூடச் சென்று சிறுசிறு வேலை செய்து கொடுப்பர். பெரியவர்கள் புரியும் தீரச் செயல்களைத் தூர நின்று அவதானிப்பர். இதிலிருந்து பிற்கால வேலைகளை பயின்று கொள்வர். சுறுசுறுப்பும் திறமையும் உடையவர்கள் ஓநாய்க் குருளையர் என அழைக்கப்படுவர். குருளைச் சாரணன் தன்னை இன்னவன் என இனங் காட்டுவதற்கு இரகசிய வணக்கம் உண்டு.

வலது கையின் சுட்டு விரல் தொப்பியைத் தொடுமாறு வைத்து அதற்கடுத்த பெருவிரலை நீட்டியபடி (V எழுத்துப்போல்) வைத்திருத்தல் (2 விரல் மேல் நோக்கியும் 3 விரல் மடித்த படியும் இருத்தல் ஆகும்)

இதில் மேல் நோக்கி இருக்கும் 2 விரல்களும் ஓநாயின் இரு செவிகளையும் குறிக்கும். இதுவே சாரணனின் குறியீடு ஆகும். ஓநாயை நினைவு கூருவதற்கான காரணம் என்ன? இது பற்றிய கதையை நினைவு கூருவது சாலச் சிறந்தது. இக் கதையே மௌக்கியின் கதை எனப்படுகிறது. மௌக்கி என்பது மயிர் இல்லாத தவளை ஆகும்.

முன்னொரு காலத்தில் இந்தியாவின் மத்திய மாகாணத்தின் ஜபல்பூர் என்ற நகரத்தினல் சியோன் என்ற பெருங் காட்டில் ஸோகான் என்ற பெரிய நொண்டிப்புலி ஒன்று இரை தேடுவதற்கு அக்காட்டின் பகுதி முழுவதும் அலைந்து திரிந்தது. அந்நேரத்தில் ஒரு விறகு வெட்டியும் அவன் மனைவியும் அவர்களது ஆண் குழந்தை ஒன்றும் காட்டின் ஓரத்தில் மூட்டப்பட்ட நெருப்பின் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர். தற்செயலாக இவர்களைக் கண்ட அந்த நொண்டிப்புலி தனக்கு இரை கிடைத்தது என்ற சந்தோசத்தினால் மூட்டப்பட்ட நெருப்பையும் கவனியாது கிட்டே வந்தது. வரும் போது அதன் காலில் நெருப்புச் சுட்டு விட்டது. நோ பொறுக்க முடியாத அப்புலி காடு அதிரும் வண்ணம் உறுமிக் கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடியது. இத்தருணம் தாங்கள் தப்பினாற் போதும் என்பதற்கிணங்க வேடனும் மனைவியும் பிள்ளையை அவ்விடத்தே விட்டுவிட்டு ஓட்டமெடுத்தனர்.

இதன்பின் மலையடிவாரத்தில் செடிகள் அசைகின்றதை ஒரு பெரிய ஆண் ஓநாய் கண்டது. தனக்கு இரை கிடைத்தது என்ற சந்தோசத்துடன் பாய ஆரம்பிக்கும் போது ஒரு குழந்தை (இதை மனிதக் குட்டி என்போம்) செடிகளின் ஊடாக வருவதைப் பார்த்து வியந்தது. பின் அது பெண் ஓநாயிடம் சென்று மனிதக் குட்டி பற்றிக் கூறியது. பின் பெண் ஓநாயின் சம்மதத்துடன் ஆண் ஓநாய் சென்று அம்மனிதக் குட்டியைக் கவ்விக்கொண்டு தங்களது குகைக்குள் சென்றது. அங்கு அம்மனிதக் குட்டி ஓநாய்க் குட்டிகளுடன் வளர ஆரம்பித்தது. அம்மனிதக் குட்டி ஓநாய்க் கூட்டங்களோடு தைரியமாகவும் சுறுசுறுப்பாகவும் விளையாடியது. இதனால் தாய் ஓநாய்க்கு அம்மனிதக் குட்டியின் மேல் அன்பு பொங்கியது.

ஏதோ ஒரு வழியால் அம்மனிதக் குட்டி ஓநாய்க் குட்டிகளுடன் வாழ்கின்றது என்ற செய்தியை அக்காட்டில் வாழும் டபாக்கி என்ற நரி அறிந்தது. நரியின் குணம் கோள் கூறுவதும் மற்றைய விலங்குகள் கழித்துவிட்ட எச்சத்தை உண்பதுமாகும். ஆகவே இந்நரி நொண்டிப்புலிக்குக் கோள் கூறியது. கோள் கூறினால் இதற்கு வெகுமதியாக ஏதாவது ஒரு சாப்பாடு கிடைக்கும் என்ற நப்பாசை தான். நரி நொண்டிப் புலிக்கு கோள் மூட்டி விட்டது.

நரி கூறியதைக் கேட்ட புலி கோபத்துடன் ஓநாய்களின் குகை வாயிலை வந்தடைந்தது. அங்கு நின்ற தகப்பன் ஓநாயைப் பார்த்து தன்னிடம் அந்த மனிதக்குட்டியை ஒப்படைக்குமாறு கேட்டது. இதற்கு தகப்பன் ஓநாய் தன்னிடத்தில் தஞ்சமடைந்துள்ள மனிதக்குட்டியைக் கொடுக்க முடியாது என வாதாடியது. இதன்பின் நொண்டிப்புலி பயமுறுத்தியும் அதட்டியும் கேட்டது. இதைக் கவனித்த தாய் ஓநாய் எம்மந்தையில் இம்மனிதக்குட்டி வளரும். அக்குட்டியும் ஒரு காலம் உன்னையே வேட்டை புரியும். நீ நில்லாமல் சென்றாயோ பிழைத்தாய், உனது பாவத்தின் நிமித்தமே தாய் வயிற்றினூடு நீ நொண்டியாகப் பிறந்தாய் பின்பும் நெருப்பினால் சுடுபட்டு மற்றக் காலையும் இழந்தாய் நீ உயிருடன் பிழைக்க வேண்டுமானால் இவ்விடமிருந்து ஓடிப்போ இது சத்தியம் என்று மிரட்டியது.

இக் குகைக்குள் புக முடியாது என்ற காரணத்தினாலும் இருவருடன் சண்டையிட்டு வெல்லவும் முடியாது என்ற காரணத்தினாலும் " அந்த மனிதக் குட்டி என்னுடையதே அதை ஒரு நாளைக்குக் காலி செய்து விடுவேன்" என்று உறுமிக்கொண்டு அவ்விடத்திலிருந்து அகன்றது.

இதைக் கேட்ட ஆண் ஓநாய் யோசனைக்குள்ளானது, " எந்த ஓநாய்க் குட்டிகளும் வேட்டையாடும் பருவமடைந்த பின் ஓநாய் மந்தைக் கூட்டத்தில் சேர்க்க வேண்டும். இதற்குரிய சம்மதத்தையும் பெற வேண்டும்" இதுவே அடவிச் சட்டம் இச்சட்ட மூலம் நடக்க வேண்டுமே. இதில் இம்மனிதக் குட்டியை எப்படிச் சேர்க்க முடியும் எனக் கவலை கொண்டது.

அம்மனிதக் குட்டி தைரியமாக மற்ற ஓநாய்க் குட்டிகளுடன் விளையாடுவதைக் கண்டு தாய் ஓநாய் பூரித்தது. தவளைக்கு மயிர் இல்லாதது போன்று அம்மனிதக் குட்டிக்கும் மயிர் இல்லாததைக் கண்டு அம்மனிதக் குட்டியை மௌக்கிரி எனப் பெயரிட்டு அன்பாக அழைத்து அதன் மீது அன்பு சொரிந்தது.

மனிதக் குட்டியை வளர்த்த ஓநாய்களை நினைவு கூருவது பொருத்தமானதே.

**திரு. மு.பா.முத்துக்குமாரு**
**குழுச்சாரணத் தலைவர்**

## Scouting – The Uncomparable Movement

Scout movement is the uncomparable movement for the youth socity in the world. It has a long history of over nine decades. It has been growing well like the largest tree and possesses millions of fruits of scouts.

Scouting gives all guidances to make the correct life in a correct way. It has been making millions of uncomparable leaders in the society. what benefits do you expect in scouting? Have you ever analyzed that?

There are a lot of advantages in scouting. Firstly, it gives self – confidence to the children. Secondly, it creates the leadership. Finally, it gives training to tackle any problems and sorrows in the life.

Sir Baden Powel, the father of the scout movement showed the correct way to man and through his life. Though his life was so difficult and dangerous, he felt very happy. He admired the nature – birds, animals, rivers, mountains, valleys, plants and so on.

Scout movement was established in 1907 in England with twenty members. But now it has millions of scout around the world and is divided in to subgroups. How could you become a good scout? A scout should obey the ten laws. A scout is always a scout.

Scouts are always prepared. They express their love to all living things. They have patriotism. They are loved by all people through their behaviour. They haven't any foe. All men and women are their relatives.

Scouting is closely connected with religion. I like to remind you the worlds used by the renowned sage swami viekanandha, his splendid speech delivered at san Fransisco in 1895. He said that the man whose heart melts and bleeds while seeing the suffering of the souls. In the same way, scouts give their hearty participation when people are snared by dangerous or sorrowful situations.

Oh my dear scout friends! Let's enjoy the scouting and become the good citizens of the country!

**V.Vipulan**
(Patrol Leader -Vulture Patrol)

## இளைஞர் சமுதாய வளர்ச்சியில் சாரணியத்தின் பங்கு

இன்றைய உலகிலே சிறுவர்களைத் திறம்பட வழிநடத்தி வாழ்க்கையிலே அவர்களுக்கென சிறப்பான ஓரிடத்ததை வகிக்கச் செய்வதில் தன்னிகரற்ற அமைப்பாக விளங்குவது சாரணியம். சாரணியத்தின் தந்தை சேர் பேடன் பவல் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கமானது ஒன்பது தசாப்தங்களாக வெற்றிப் பாதையிலே வீறுநடை போடுகின்றதென்றால் அதற்குக் காரணம் பிரபு பவலின் சிறந்த அத்திவாரமே என்றால் அது மிகையாகாது.

இருபது பேருடன் ஆரம்பிக்கப்பட்டுப் பல இலட்சக்கணக்கான சாரணர்களுடன், இன்று பரந்து விரிந்து கிடக்கும் இவ்வையகத்தில் அச்சம், சோம்பல், மடமை போன்றவற்றை அடியோடு அகற்றி இளைஞர் சமுதாயத்ததை நல்வழிப்படுத்துவதிலும் வழிகாட்டுவதிலும் இவ்வமைப்பின் பங்கை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

சாரணியமானது தலைமைத்துவம், நற்பண்பு மிகுந்த பிரஜைகளை உருவாக்கி, இன்றைய பூமியின் சாபக்கேடுகளை நீக்க இப்பூமியெங்கும் வாழும் சாரணர்கள் இன்றைய உலகத்தின் மாபெரும் சக்திகள். இளைஞர் சக்தி மகத்தானது. இப்பிரபஞ்சத்தையே மாற்றியமைக்கக் கூடியது. அச்சக்தியை திறம்பட வழிநடத்தினால். அது தேசிய அபிவிருத்தியில் மகத்தான ஒரு வளர்ச்சியை ஏற்படுத்தும்.

பூசல்களும் ஊழல்களும் மன அமைதியின்மையும் நிரம்பிய இன்றைய பூமியில் இளம் சந்ததியை நல்ல வழியிலே நடத்தவேண்டியது பெரியோர்களனைவரதும் தலையாய கடமை. உலகினிலே அமைதியும் சுபீட்சமும் ஏற்பட சாரணியம் அயராது பாடுபட்டு வருகின்றது.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பார்கள். தமிழ் முன்னோர் சிறு வயதில் பழகும் செயல்களே வாழ்வு முழுவதும் நிலைத்து நிற்கப்போகின்றன. வாழ்வின் சவால்களையும் பெரும் புயல்களையும் எதிர்த்து நெடுங்குன்றென நிமிர்ந்து நிற்க வல்லவர்கள் சாரணர்கள்.

வாழ்வில் எந்தத் துறையிலும் தேர்ச்சியைப் பெறுவதற்கான அடித்தளத்தை சாரணியம் சிறுவயதிலேயே ஏற்படுத்துகின்றது மற்றவர்களை நேசித்தல், நட்புறவோடு பழகுதல், சகோரத்துவம் என்பன சாரணியத்தில் காணப்படும் முக்கிய பண்புகள்.

சாரணியமானது சமயங்களுடன் பின்னிப் பிணைந்தது. "உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி" என்ற கருத்தைச் சாரணியம் என்றுமே வலியுறுத்தி நிற்கின்றது. "எப்பொழுதும் தயாராயிரு" (Be prepared) என்பதே சாரணர்களின் மகுடவாசகம்.

மாபெரும் காட்டாற்று வெள்ளமென கரைபுரண்டு பாயும் நதிகள் போல இளைஞர்களின் பலம் வீண் போகாமல் தடுத்து சர்வதேசத்திலுமே தன்னிகரற்று விளங்கும் எமது இயக்கத்தின் பெருமை அளவிடற்கரியது. சேவை செய்வதிலடையும் ஆனந்தமே சாரணர்களின் ஆனந்தம். தமது தலைவர்களுக்குக் காட்டும் பணிவு, கீழ்ப்படிவு என்பன வளர்ந்து பெரியவர்களுக்குக் கனம் பண்ணும் எமது கலாச்சாரச் சொத்தை அழியாமல் பாதுகாக்க உதவுகின்றது.

வெட்ட வெளியிலும், காடுகளிலும் பாசறை வாசம் செய்யும் போது சாரணர்கள் அடையும் அனுபவங்கள் அவர்களின் எதிர்காலத்தில் வழிகாட்டும் அரும்பெரும் தூண்களாக விளங்குகின்றன. எம்மை வழிநடத்தி நல்ல பிரஜைகளாக வளர வழிகாட்டும் சாரணியம் என்றும் வளரட்டும்!

**சாரணியமே எமது வாழ்வு!**
**வாழ்வே சாரணியம்!**

பூமகிழன்

பாசறை வாசந்தான் சாரணியத்திலே சிறுவனுக்கு அதிக கவர்ச்சி தரும் அம்சமாகும். இச்சிறுவனுக்கு தேகாரோக்கியத்தை அளிப்பதுடன் சுய நம்பிக்கையையும் ஆதரவையும் போதிக்க அவகாசத்தை உதவுவதுமாகும்.

- தந்தை பேடன் பவல் -

## OUR TROOP LEADER



**Mas.J.Thaneshkemar**
– Efficency Decoration –

### ASS.TROOP LEADER



**Mas.V.Kandhappa**
- Efficency Decoration

### QUARTER MASTER



**Mas.S.Kajanan**
- Efficency Decoration

### TREASURER



**Mas.V.Thevaganthan**
- Efficency Decoration

# சாரணியம்

உலகப்போர் நடைபெறமுன் சமூகப்பற்றுடன் எதிர்காலத் தேசப் பற்றை நோக்கிய சில சிந்தனையாளர்கள் சிறுவர்களைக் குறிப்பாக மாணவர்களை ஒன்று திரட்டி ஒழுக்கமான, பண்பான தலைசிறந்த புத்திஜீவிகளினை உருவாக்கும் நோக்குடன் -- நல்வழிப்படுத்தும் நோக்குடன் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிறவுண்சீஸ் தீவிலே முதலாவது சாரணியப் பாசறை ஆரம்பமானது. இதன்பின்னணியிலேயே சிறுவர் உரிமைகள், மனித உரிமைகள், பெண்கள் (ஒடுக்குமுறைக்கெதிராக) உரிமைகள் போன்றன உருவெடுத்தன. இச்சாரணியம் ஆனது தனித்தே கல்வியை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் சமகால மாணவர்களினை கருத்திற்கொண்டும் பாடசாலைக்குச் சென்றால் பிள்ளை தனக்கு வேண்டிய அறிவு பூராகவும் பெற்றுவிடுகின்றது என்கின்ற மனநிலையிலுள்ள பெற்றேரை நினைவிற் கொண்டும்; முன்னோக்கிய சிந்தனை வெளிப்பாடாக; 1910ம் ஆண்டிலேயே யாழ் .இந்துக்கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை செயற்பட்டு வருகின்றமை இவ்விடத்தே நோக்கத்தக்கது.

பொதுவாக மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்குப் பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புக்களில் சுமத்தப்படும் அதிகரித்த கல்விச்சுமை, வீடாயினும் நாடாயினும் வன்முறை, சுரண்டல், பாகுபாடு காட்டப்படல், அடிமை, அகதிநிலை, தொடர்ச்சியான இடம் பெயர்வு, சண்டை/ யுத்தம், தினம் ஒரு துன்பச்செய்தி என நாளுக்குநாள் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் மனநிலை வெவ்வேறு கோணங்களில் சென்றுவிடுகின்றது. ஒரே வயதுடையவர்கள், காலத்தின் கட்டாயத்தினால் இன்று பல்வேறு திசைகளிலுள்ளனர். இவை அனைத்தையும் மீறி நடைபெறும் தொடர் யுத்தத்திற்கு மத்தியிலும்; தமது கல்வி மற்றும் இதர அலுவல்கட்கு மத்தியிலும் சமூகத்தை நேசிக்கவும், நோக்கவும் தவறவில்லை. அதுவே சாரணியம். ஒரு மனிதன் தனித்தே கல்வியினூடு மேம்பாடு/ அபிவிருத்தி அடைந்து விடுவதில்லை. அவன் தனது ஆற்றல், திறமை, மற்றும் ஆளுமைகளினை வெளிப்படுத்தவும் அவற்றிற்கு உரிய களம் அமைத்துக் கொடுக்கப்படும் பட்சத்தில் உடல், உள மன ரீதியாக மேம்பாடடையவும் ஏட்டுக் கல்விக்கு மேலதிகமாக சூழல்/ சமூகம் தொடர்பான கல்வியையும் கற்கவேண்டியவனாகின்றான். அத்தகையதோர் சிறப்பான கல்வி முறையினை சாரணியம் கொண்டுள்ளது என்பதற்கு யாழ்.இந்துவின் பல்லாண்டு கால சேவையிலே இணைந்து கொள்ளும் மாணவச் சாரணர்களது அதிகரித்த எண்ணிக்கையும்; யாழ்.இந்துவின் சாரணியம் சாதனைபடைத்த சிறந்த பல செயற்பாடுகளும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்..

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பார்கள் சிந்தனையாளர்கள்."For children don't say tomorrow because they are our future" என்கின்றார் பிரபல ஆங்கிலக் கவிஞர் ஒருவர். இன்று சாரணியத்தில் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும், தன்னம்பிக்கையையும், நற்றுணிவையும், மனவலிமையையும், திறமையாக திடமான மனப்பாங்கை வளர்க்கும் திறனை அதிகரித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினைப் பயிலும் அல்லது பின்பற்றும் இன்றைய சிறுவன் நாளை குடும்பத்திலோ, சமூகத்திலோ அன்றி சர்வதேச தரத்திலே கூட பிரபல்யம் பெறுவதற்கு பெரும்பான்மைப் பங்கை சாரணியத்தினூடாகவே பெற்றுக் கொள்கின்றான்.

இந்நிலையில் சாரணியத்தைக் கடைப்பிடித்துச் சிறந்த ஒழுக்க சீலர்களாக சிறுவர்களினை சமூக மட்டத்தில் உருவாக்குவதினூடாக இத்தகைய நற்சமூக அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து நற்கிராமமாகி, பிரதேசமாகி, மாவட்டம் பின் மாகாணமாகி, தேசிய, சர்வதேச அளவுகளில் சாரணியத்தின் நோக்கம் எட்டப்படுவதே சாரணியத்தின் பரந்தளவான சிந்தனை எனக் கொள்ளலாம்.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய சாரணியத்தின் சிறப்புக்கள் இன்னும் பன்னெடுங்காலம் நீடித்து நிலைத்து நிற்க நாமும் ஒன்றிணைந்து செயற்பட உறுதி எடுப்போமாக!

நன்றி

வே.தேவகாந்தன்
(அணித்தலைவர்-சேவல் அணி)

# பூத்திருக்கும் புத்தாயிரமாம் ஆண்டில் சாரணியம்

வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்ற இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்திலே பல ஆயிரம் ஆண்டுகள் பின்தள்ளப்பட்ட, வசதிகள், வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட நிலையில் எம்மினம் எமது மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கிறது. யுத்தம் என்ற கொடிய அரக்கனின் கோரப்பிடியில் சிக்குண்டு வேதனைகளையும் சோதனைகளையும் எம்மினம் எப்பொழுதும் சந்தித்தவண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் எமது சமூகத்தை இலட்சியமிக்க சமுதாயமாக மாற்றுவதற்கு வலுவும் துணிவும் கடமையுணர்வும் இலட்சிய வேட்கையும் நேர்மையும் உடைய இளைஞர் சமுதாயம் ஒன்று உருவாவது இப்புத்தாயிரம் ஆண்டின் அவசர தேவையாகும்.

யாழ்.இந்துக்கல்லூரியின் சாரணர் இயக்கமானது கடந்த காலங்களில் காலத்தின் தேவைகருதி பல்லாயிரக்கணக்கான சாரணர்களை உருவாக்கி எமது சமூகத்திற்கு அளித்திருக்கிறது. இன்னமும் அளித்தவண்ணமுள்ளது.

சமூகத்திற்குச் சேவை செய்வதே உன்னத பணியாகக் கொண்ட சாரண இயக்கத்தின் தந்தை பேடன் பவலால், 1907ம் ஆண்டு இவ்வியக்கம் இங்கிலாந்திலே உள்ள பிரௌண்சித் தீவிலே 20 உறுப்பினர்களுடன் ஆரம்பமானது. இன்று இவ்வமைப்பானது சர்வதேசமெங்கும் பரவிக் காணப்படுகின்றது.

சாரண இயக்கத்தில் ஈடுபடும் ஒருவன் அவ்வியக்கத்திலே தன்னை ஈடுபடுத்தும் போது பல்வகைப்பட்ட தீவிர பயிற்சிகளை அவன் பெற வேண்டியவனாகிறான். ஒவ்வொரு வகையான பயிற்சிகளும் அவனை நெறிமுறையான கட்டுப்பாடுகளுக்கு அமைந்து நடக்கும் உளப்பக்குவத்தை அவனுக்கு ஏற்படுத்துகிறது. "பிறருக்கு சேவை செய்", "எப்பொழுதும் தயாராக இரு", "சுயநலமற்றவனாக இரு" என்பன போன்ற இலட்சியங்களில் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, உண்மை, நேர்மை, உறுதி, இலட்சிய வேட்கை உள்ளவனாக மாற்றுகிறது.

அதேபோல் பாசறைப் பயிற்சிகள், நடைபிரயாணம், நீச்சல், முதலுதவி, சமூக சேவைகள் போன்ற செயற்பாடுகள் அவனது உடலையும் உறுதியாக்குகிறது.

ஒவ்வொரு சாரணனும் தனது பயிற்சிக் காலத்தில் பல்வகைப்பட்ட பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படும் ஆற்றல் மற்றும் அணித்தலைவனாக விளங்கும் போது தலைமை தாங்கும் பண்பு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சுயநலமற்ற தன்மை, முடிவெடுக்கும் ஆற்றல், துணிவு என்பன போன்ற பக்குவங்களை அவன் பெறுவதால் ஒரு சாரணன் பூரண மனிதனாகிறான்.

கல்லூரிக் காலத்தில் பூரண நிலையெய்திய சாரணன் தான் வாழும் சமூகத்தில் ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவனாக விளங்குகிறான். அவனுடைய சொற்களும் செயல்களும் தூய்மையுடையனவாக விளங்குகிறது. "உலகிலுள்ள மற்ற மக்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதன் மூலமே உண்மை இன்பத்தை யாம் பெற முடியும்" என்ற உயர்ந்த இலட்சியத்துடன் இப்புத்தாயிரமாம் ஆண்டில் வெற்றிநடை போடுகிறோம்.

"தினமும் ஒரு நற்பணி செய்வோம்"

*வி.திருக்குமரன்*
(அணித்தலைவர் – கிளி அணி)

# றொபேட் ஸ்ரிவின்சன் ஸ்மித் பேடன் பவல் பிரபுவின் வரலாறு

- சாரண ஸ்தாபகர் றொபேட் ஸ்ரிவின்சன் ஸ்மித் பேடன் பவல்.
- இல 6 ஸ்ரான் கோப் வீதி லண்டன் W2 இல் 1857ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி பிறந்தார். பத்து பிள்ளைகளில் எட்டாவது பிள்ளை ஆறாவது மகன்.
- தந்தை எவ் .ஜி.பேடன்பவல் ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலைப் பேராசிரியர்.
- தாய் அட்மிரல் வில்லியம் ஸ்மித்தின் மகள் கென்றீற்றா கிறேசி.
- பேடன் பவல் தனது மூன்றாவது வயதில் தந்தையை இழந்தார்.
- இவரது குடும்பம் எளிமை அறியாது தாய் – பிள்ளைப் பாசத்துடனும் சகோரத்துவ ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தார். இதனால் ஒரு மகிழ்ச்சி மிகு குடும்பமாகத் திகழ்ந்தது.
- பேடன்பவல் 1870ம் ஆண்டு தனது 12ம் வயதில் உபகாரச் சம்பளம் பெற்று சாட்டற் கவுஸ் கல்லூரியில் உயர் கல்வி பெற்றார். பாடசாலை சுற்றாடலிலுள்ள காட்டில் வெட்டவெளி வாழ்க்கையை நடத்தினார்.
- இவர் நடிப்பு, விளையாட்டு, ஓவியம் வரைதல், சங்கீதம் வெட்டவெளி வாழ்க்கை, படகு ஓட்டுதல் ஆகிய பலகலைகளில் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். இவை பிற்காலத்தில் அவரது உயர்வுக்கு உதவியது.
- தனது 19 வயதில் பட்டப்படிப்பினை முடித்துக்கொண்டு இராணுவத்தில் சேர்ந்தார் இவர் இந்தியா, ஆப்கானிஸ்தான், தென்ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் சேவை செய்தார்.
- இந்தியாவில் பன்றி வேட்டைக்கான பரிசினைப் பெற்றார்.
- இவரது திறமை உணர்ந்த சூலு வம்சத்தினர் இவருக்கு "என்றும் துயில் கொள்ளாத ஓநாய்" (இம்பீசா) என்ற பட்டத்தை வழங்கி எலும்புக் கோர்வையிலான மாலையை அணிவித்தனர். அதை அடியொற்றியது தான் தருசின்ன மணி ஆகும்.
- மோல்ராவில் மூன்று வருடம் உதவி இராணுவச் செயலாளராகப் பணிபுரிந்தார்.
- 1897ல் 13வது குதிரைப்படைத் தளபதியானார்.
- 1899ல் மேப்கில் நகரை எதிரிகள் பெரும்படையுடன் முற்றுகையிட்ட போது இங்கிலாந்தில் இவரது படை உதவி கிடைக்கும் வரை 217 நாட்களுக்கு சிறுவர்களின உதவியுடன் மேப்கில் நகரைப் பாதுகாத்து பெரும் வெற்றி வீரனாக உலகப் புகழ் பெற்றார். இதனால் தான் சிறுவர்களை உரிய வழியில் வழிநடாத்தினால் எதையும் சாதிப்பார் என முடிவுசெய்தது சாரணர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு வழிகோலியது.
- 1901ஆம் ஆண்டு பெரும் வெற்றி வீரனாகத் தாய்நாடு திரும்பினார்.
- 1903ம் ஆண்டு சாரணியத்திற்குத் துணை என்னும் நூலினை பகுதி பகுதியாக வெளியிட்டார்.
- 1903ல் இன்ஸ்பெக்ரர் ஜெனரல் ஆனார்.
சிறார்களின் பெரும் மதிப்பையும் பெற்று பெரியோர்களது கவனத்தையும் ஈர்த்து நாட்டிற்கும் சமயத்திற்கும் சேவை செய்ய சாரணியத்தை உருவாக்க ஆரம்பித்தார்.
- விக்ரோறியா மகாராணியின் வேண்டுகோளிற்கிணங்க பரீட்சார்த்தமாக 1907ம் ஆண்டு இங்கிலாந்தில் ஆங்கிலக் கால்வாயிலுள்ள பிரவுன்சீஸ் தீவில் 20 பேருடன் சாரணர் பாசறையை நடாத்தி வெற்றி கண்டார்.
- 1906ம் ஆண்டு இளைஞர் சாரணியம் என்ற நூலை வெளியிட்டார்.
- 1912ம் ஆண்டு உலக சாரணர் இயக்க சுற்றுலாவினை ஆர்காா்டியன் என்ற கப்பலில் மேற்கொண்டார். இதே கப்பலில் செல்வி ஒலெவ் உம் தந்தை சென் கிளையர் சோமஸ் உம் விடுமுறை கழிப்பதற்காக மேற்கு இந்திய தீவுகளுக்கும் நியூயோர்க்குக்கும் விஜயத்தை

- மேற்கொண்டனர். 03-01-1912 ல சதாம்ரன் துறைமுகத்தினை கப்பல் அடைந்த போது துறைமுக சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் கப்பல் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடப்பட்டு நிற்கும்போது லெப்டினன்ட் ஜெனரல் மாவீரன் பேடன் பவல் ஓர் வள்ளத்தில் ஏற்றிச் செல்லப்பட்டார். துறைமுகக் கரையில் இவருக்கு சாரணர் மரியாதை வழங்கப்பட்டது. அதனை அவதானித்திருந்த மக்களில் ஒலென் உம் ஒருவர். மீண்டும் பேடன் பவல் ஆர்கார்டியன் என்ற துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிட்டு இருந்த கப்பலில் வந்து ஏறியபோது ஒருவரை ஒருவர் அறிமுகமானார்கள் ஒருவரை ஒருவர் விரும்பினார்கள். கப்பல் யமேக்காவை சென்று அடைந்ததும் இரகசியமாகத் திருமணப்பதிவு செய்தனர்.
- முதலாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாக பேடன்பவல் நாடு திரும்பினார்.
- 28-9-1912 ல் உத்தியோகபூர்வ திருமணப்பதிவு நடைபெற்று 30-9-1912ல் இங்கிலாந்தில் திருமணம் நடைபெற்றது. இருவருக்குமிடையில் வயது வித்தியாசம் 32 வருடங்களாகும்.. இவர்களுக்கு பீற்றர், கீதா, பெற்றி என்று மூன்று பிள்ளைகள் பிறந்தனர்.
- 1916ம் ஆண்டு குருளைச் சாரணர் பிரிவை ஆரம்பித்தார்.
  1918ல் திரிசாரணர் பிரிவை ஆரம்பித்தார்.
  1919ல் வெல் பூங்காவை ஆரம்பித்தார்.
  1920ல் முதலாவது உலக சாரணர் ஜம்போறியில் உலக பிரதம சாரணராக பிரகடனப்படுத்தினார்.
  1925ல் வலது குறைந்தோருக்கான சாரணியத்தை ஆரம்பித்தார்.
  1929ல் 5ம் ஜோர்ச் மன்னரால் பிரபு பட்டம் வழங்கப்பட்டது
  1930ல் சிமாட்டி ஒடவல் பேடன்பவல் உலக பிரதம சாரணியாக நியமிக்கப்பட்டார்.
  1938ல் பேடன் பவல் பிரபு தன் வாழ்நாள் இறுதியில் தனக்கு பிடித்த இடத்தில் ஆபிரிக்காவில் உள்ள கென்யாவிற்கு சென்று நைஜிரி என்ற கிராமத்தில் வாழ்க்கையைக் கழித்து 1941ல் தைமாதம் 8ம் திகதி நித்திய இளைப்பாறிய பின் சிமாட்டி பேடன்பவல் சாரணியத்தை பொறுப்பேற்று நடாத்தினார்.

பேடன் பவல் பிரபவின் இறுதி வார்த்தைகளும் பொன்மொழிகளும்


- "சாரணியம் நன்றாக வளர்ந்து விட்டது அது தானாக வளரும் நான் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை."
- நான் மிக்க மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தேன். நீங்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ வேண்டுமென விரும்புகின்றேன்.
- நாங்கள் நன்றாக வாழ வேண்டுமென இறைவன் எம்மைப் படைத்துள்ளார்.
- பணத்தினால் இன்ப வாழ்வினால் மகிழ்ச்சி உண்டாவதில்லை.
- ஆரோக்கியமாக வாழப்பழகுதல் வேண்டும்.
- போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
- கடமைகளை சரிவரச் செய்.
- மகிழ்ச்சியோடு வாழ்ந்து மகிழ்ச்சியோடு சேவைசெய்து மகிழ்ச்சியோடு மறைய ஆயத்தமாயிரு.

தாய்ப்பாசம் பெரியது.
சகோதரத்துவம் சிறந்தது.
நாட்டுப்பற்று உறுதியானது.
சிறார்களை உரிய வழிநடத்தின் எதையும் சாதிப்பர்.

*(இத்தகவல்களை எனக்கு உரியமுறையில் வழிவகுத்துத் தந்து நெறிப்படுத்திய நா.போஜன். ச.நீ (பயிற்றுனர் தலைவர்) அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.)*

**திரு.செ.தேவரஞ்சன்**
**உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி)**

# 4th Jaffna Scout Troop - 1999



***Setaed*** : 1st Row (L – R) Mas.M.Thushan, Mas.S.Sabesan, Mas.I.Nirakulan , Mas.N.Sivaruban, Mas.R.Mohanraj, Mas.R.Kapilraj, Mas.T.Jananthan, Mas.N.Pirabu, Mas.M.Majuran

***2nd Row*** : (L – R) Mas.K.Saravanan (Editor), Mas.M.Jotheeswaran (S.L), Mas.N.Nagaratnam (Secretary), Mr.M.B.Muthukkumaru (G.S.L), Mr.A,Srikumaran (Principal), Mas.M.Babugi (T.L), Mr.P.Maheshwaran (Dep. Principal), Mas.M.Sagilendra (A.T.L). Mr.S.Kohilan (S.L), Mr.K.Partheeban (Co-ordinator , Colombo), Mas.M.Majunthan (Badge Secretary)

***Standing*** : 1st Row : (L – R) Mas.V.Thirukkuman (Com. Ser. Incharge), Mas.V.Thevakanthan, Mas.V.Kandhappa (A,Q,M), Mas. S. Senthurr (P.L), Mas. V.Vipulan (Asst. Sec. ), Mas.S.Barathy, Mas.S.Kajanan, Mas.J.Thaneshkumar (Trea.),

***2nd Row*** : Mas.M.Suganthakumar, Mas.J.Sujeevan, Mas.S.Kamalaharan (P.L), Mas R.Praveen, Mas.V.Benet Piruthiviraj (A.P.L), Mas.S.Theenathaksan, Mas.M.Umaikaran (P.L), Mas.E.R.Kishok (A.P.L) Mas.M.Rajeevan, Mas.P.Pratheeban, Mas. N.Aingaresan (A.P.L), Mas.M.Kaneeshananth, Mas.S.Sarmilan, Mas.J.Lajeevan

# சாரணியம் வாழ்க்கைக்கு வழிகாட்டி

1907 ம் ஆண்டு பேடன் பவல் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறிய சிறுவர் இயக்கம் இன்று உலகெங்கும் பரவி வளர்ச்சியடைந்து இனம், மதம், சாதி என்ற குறுகிய எல்லைகளைக் கடந்து ஒரு முன்மாதிரியான சர்வதேச இயக்கமாக பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. பேடன் பவல் பிரபுவின் விருப்பங்கள், ஆசைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அதியுயர்ந்த இலட்சியங்களையும் நோக்கங்களையும் தன்னகத்தே கொண்டு இளைய தலைமுறையின் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற ஒரு சிறந்த இயக்கமாகக் தொழிற்படுகின்றது.

சாரணர் இயக்கத்தில் இணையும் மாணவன் ஏனைய அனைத்து சாரணர்களுடனும் தோழமையுடனும் அன்புடனும் சகோதரனாகவும் பழகும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பலதரப்பட்ட பயிற்சிகள், பரீட்சைகள் சாதனைகள் மூலமாக இயங்கவும், பரந்த சமூகத்திற்கு தன்னாலான உதவிகளைச் செய்யக்கூடியவனாக தன்னை மாற்றிக்கொள்கின்றான். சிறுவயதிலிருந்தே நம்பிக்கை, கடமையுணர்ச்சி, அன்பு, மரியாதை, சிக்கனம் போன்ற சிறந்த குணங்களை சொல்லில் மாத்திரமின்றி செயலிலும் செய்துகாட்டுகின்றான். பலவிதமான கூட்டுப்பயிற்சிகள், பாசறை வாச நிகழ்ச்சிகள் மூலம் கற்றுக்கொண்டவற்றை பரீட்சைகள் மூலமாக சின்னங்களைப் பெற்று தன்னை மேம்படுத்திக்கொள்கின்றான்.

சாரணர் பயிற்சிகள் மாணவனை இளம் பராயத்திலிருந்தே அவனது வாழ்க்கைக்கு அத்திவாரமிடுகின்றதுடன் பண்படுத்ததுகின்றது. வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வகைப்பட்ட இன்ப துன்பங்களை சுமக்கவும் தாங்கவும் ஏற்றவனாக்குகின்து. ஒருவனது வாழ்க்கைக்கு வேண்டிய மனத்தூய்மை, விடாமுயற்சி, சகோரத்ததுவம் விசாலமான நோக்கு முதலிய நற்பண்புகள் சாரணர் பயிற்சிகள் மூலம் வழங்கப்படுவதனால் முழுமையானவனாக வாழ்க்கைக்குள் பிரவேசிக்க வழி வகுக்கின்றது.

ஒவ்வொரு மாணவனும் தத்தமது ஆற்றலிற்கேற்ப தம்மை செப்பமிட்டு, உயர்ந்த, பரந்த இலட்சியங்களை சாரணியம் மூலம் பெற்றுச் சிறந்த வழிகாட்டியாகவும் அமைகின்றான். எனவே அதற்கேற்ப மகிழ்ச்சியாக வாழ்வோமாக!

**நா.ஐங்கரேசன்**
+உதவி அணித்தலைவர்+

### அணித் தலைவர்களுக்கோர் வார்த்தை...

உங்கள் அணியிலுள்ள ஒவ்வொரு சிறுவனையும் நல்லவனாகப் பயிற்றி விடுவதற்கு சாத்தியமாகுமாகையால், அணித்தலைவர்களாகிய நீங்கள், உங்கள் அணிகளிலுள்ளவர்களை நீங்களாகவே முழுப்பொறுப்புமேற்றுப் பயிற்றிவிடுவீர்களாக ஒன்றிரண்டு திறமையுள்ள சிறுவர்களையும் மற்றவர்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும் வைத்துக்கொள்வதினால் எப்பயனும் கிடையாது.

- தந்தை பவல் -

# சாரணியத்தின் இலக்குத்தான் என்ன?

தந்தை பேடன் பவல் பாதையில் சாரணியம் உலகெங்கும் வீறுநடை போட்டுக்கொண்டிருக் கையில் இலங்கையிலும் ஒரு பெரு வரலாற்றையே படைத்திருக்கிறது சாரணியம். ஆனால் யாழ்ப்பாணத்தில் யுத்தம் காரணமாக சாரணிய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தாலும், யாழ்ப்பாணச் சாணரர்கள் தளராத மனசுடன் தமது சாரணிய சேவைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே நாம் எமது நிறைவேற்றுவதற்கான ஓர் ஆரம்பப்படியாகும்.

இன்றைய கால நமது சாரணன் ஒருவனுடன் நீ சாரணியத்தில் இணைந்தால் நோக்கம் வென்று வினாவும் போது "எனது இலக்கு ஜனாதிபதி சாரணனாதல்" என்றவாறு அவனது பதில் அமைகிறது. ஜனாதிபதி சாரணனால்தான் சாரணியத்தின் இலக்கை எட்டமுடிந்தது. என்னால் அவ்விலக்கை எட்ட முடியவில்லையே என அங்கலாய்ப்பவர்களும் உள்ளனர்.

இன்றைய காலத்தில் உண்மையான சாரணியத்தின் போக்கு ஒருபுறம் திரும்பி நிற்க, விருதுகளைப் பெற்றுக்குவிப்பதே உண்மைச் சாரணியமாக விஸ்பரூபமெடுத்து வருவதை காணமுந்தது. இது இவ்வாறிருக்க சாரணியத்தின் உண்மையான இலக்கு என்னவெனப் பார்த்தால்:

"என்றோ ஒருநாள் சாரணனை அவனது வாழ்நாள் முழுவதும் சாரணனாக மாற்றிவிடுகிறது. சேவை, நன்நடத்தை, கீழ்படிவு, ஐக்கியம். நேர்மை என்பவற்றை ஒரே தடவையில் அடித்துக் கூறி நிற்பவனே சாரணன் ஆவான். தமது எதிர்கால வாழ்க்கைக்கே சாரணியம் சிறந்தவொரு அடித்தளத்தை இட்டுவிடுகிறது. நமது ஈழத்தின் எதிர்காலச் சிற்பிகளாக நம் சாரணர்கள் விளங்க வேண்டும். இதற்கு அறிவும் ஆற்றலும் கொண்ட சாரணர்கள் உருவாக வேண்டும். மனித குலத்தின் ஒருமைப்பாடு. சமுதாய மாற்றத்தில் மக்கள் கொள்ளும் பங்கின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கூறுவதே சாரணியம். சாரணியம் வெறும் பாடசாலை இயக்கம் மட்டுமன்று நவீன உலகில் நனி சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு பயிற்சியளிக்கும் துறையே இதுவாகும். நாம் சாரணியத்தில் ஈடுபடுவதன் மூலம் நல்லொழுக்கமும், பொறுப்புணர்ச்சியுமுள்ள நன் பிரசைகளாக மாறி பிறருக்குச் சேவை செய்யவேண்டும். பிற்கால சமுதாய மாற்றங்களில் பங்குகொள்ளும் குடிமகனாக மாறுவதற்கு சாரணியத்தின் இலக்கை அமைக்கவேண்டும். தன்னையும் உயர்த்தி பிறரையும் உயர்த்துவதே சாரணனின் முக்கிய இலக்காக மாறவேண்டும்.

சாரணிய பாசறை வாசத்தின் மூலம் ஒருவன் பெறும் அனுபவங்களோ எண்ணற்றவை. அவ்வாறானதொரு பாசறை அனுபவத்தின் மூலம் ஒற்றுமையாகக் கூடி வாழ்தல், பெரியோரை மதித்தல், பயமற்ற சுபாவம், சுயமாக உணவு சமைத்தல். சுயமாக குடில்களை அமைத்தல் போன்றவற்றை இவன் பெறுவதோடு பிறருக்கும் அவற்றைச் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்ற அவாவும் அவன் மனதில் எழுகின்றது.

ஆகவே சாரணர்களாகிய நாம் விருதுகளைப் பெற்றுக் குவிக்கும் சாரணியத்தை உண்மையான சாரணியத்தின் மூலம் விருதுகளைப் பெறுவதாக மாற்றி எதிர்கால சமுதாயத்தை சுபீட்சமானதாகவும் தலைநிமிர்ந்து வாழ வைக்கவும் ஒளிமிகுந்ததாகவும் மாற்றுவதற்கு எமது சாரணியத்தின் இலக்கை பயன்படுத்துவதன் மூலம் தந்தையின் கனவு நனவாகும் இவ்வேளையில் அதை விரைவுபடுத்தி "சாரணன்" என்பவர் யார்? என்பதை அனைவருக்கும் புரிய வைப்போம்!

**வாழ்க சாரணியத் தந்தை**
**வாழ்க சாரணியச் சேவை**
**வாழ்க சாரணியம், வையகமும் துயர்தீர!**

**ச.கஜனன்**
-அணித்தலைவர் -மயில் அணி-

# 4th Jaffna Scout Troop - 2000
## Patrol Leaders' Council



***Seated*** (L – R) Mr.S.Ganga (A.S.L), Mr.S.Kohilan (S.L), Mas.S.Kajanan (Q.M.& P.L), Mr.A.Srikumaran (Principal), Mas.J.Thaneshkumar (T.L), Mr.P.Maheshwaran (Dep. Principal), Mas.V.Kandhappa (A.T.L), Mr.M.B.Muthukumaru (G.S.L), Mr.M.Jotheeswaran (S.L)

***Standing*** : Mas.V.Vipulan ( Bad. Sec. & P.L), Mas.S.Barathy (Sec. & P.L), Mas.R, Piragash (A.P.L), Mas.N.Aingaresan (A. P.L), Mas.S.Bakeerathan (A.P.L), Mas.S.kamalakaran , Mas.V.Benet Pirathiviraj (A.P.L), Mas.M.Umaikaran (A.P.L) , Mas.V.Thirukkumaran (A. Q.M & P.L), Mas V.Tevaganthan (Trea. & P.L), Mas.S.Senthur

***Absentees*** : Mas.M.Majunthan , Mas.E.R.Kishok, Mas. M.Rajeevan

# வேறெங்கு சாவுனக்கு!

உலகத்து மானிடத்தின் ஒளி விளக்கே இந்தப்
பாரினில் சிறுவரின் பெரு விளக்கே।
பூமிதன் மாந்தரின் திருவிக்கே – எட்டுத்
திக்கிலும் பரவிடும் பொது விளக்கே।

அறிவென்னும் ஒரு பெரும் வாளெடுத்து – மனத்
தைரியம் எனும் பெரு மருந்தெடுத்து
மடைத் தனமெனுமொரு விசர்த்தனமறுத்து – உன்றன்
மடியினில் தவழ்ந்திடும் பேறெனக்கு

சாரணிய மெனுமொரு பெயரெடுத்து – பெரும்
பாரினில் சிறுவனை வழிநடத்து
அவன் வாழ்வெனும் நெடும் பெரு பயணமதை உன்றன்
மடியினில் விளக்கிடும் தொழிலுனக்கு।

திக்கெட்டும் புகழ் பேடன் பவல் உனக்கு – அவன்
சிந்தையில் உதித்பெரும் பேறுனக்கு
பார் உள்ளவரை வந்திடும் புகழுனக்கு – யாம்
உள்ளவரை வேறெங்கு சாவுனக்கு।

பூமகிழன்

# சாரணியம்

## ஸ்தாபகரைப் பற்றி சிறு கண்ணோட்டம்

சாரணியத்தின் தந்தை றோபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரில் 1857ம் ஆண்டு மாசி 22ம் திகதி தாயின் கருவிலிருந்து வெளியேறினார். இவர் தந்தை றொபேட் கிறேஸ் பேடன் பவல். இவர் ஒரு மதகுரு. அவர் சர்வகலாசாலை போதனாசிரியர் பேடன் பவலின் தாயார் பெயர் கென்றீற்றா கிறேசி (அட்மிரல் வில்லியம் சிமித்தின் மகஸ் பேடம் பவவின் குடும்பத்தில் 7 சகோதரர்கள். இவர்தான் அக்குடும்பத்தில் கடைசிப்பிள்ளை இவர் மூன்று வயதில் தந்தையை இழந்தார். படிப்பில் ஆர்வம் குன்றியவராகக் காணப்பட்டார். வேறு கலைகளில் ஆர்வம் காட்டினார். உதாரணமாக

1. படகோடல்
2. ஆடல்
3. பாடல்
4. வேட்டை
5. நடிப்பு
6. நாடகம்

போன்றவை இவர் தன் பதினொராவது வயதில் உபசாரச் சம்பளம் பெற்று சாட்டற் ஹவுஸ் கல்லூரியில் மேற்படிப்பிற்காய் இணைந்தார்.

தனது பத்தொன்பது வயதில் பட்டப்படிப்பு முடித்து இராணுவத்தில் சேர்ந்தார் (1876). தனது இருபத்தாறாம் வயதில் தளபதி ஆனார் (1885). 1887 இல் சூலு சாதியுடன் பெரும் யுத்தங்களைப் புரிந்து வெற்றியீட்டினார். இவ்வெற்றிக்காக இவருக்கு ***"என்றும் துயில் கொள்ளாத ஓநாய்"*** எனும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் 1899 இல் கேணலானார். இவ்வேளை மேப்பிங் நகரை பெரும் முப்படை முற்றுகையிட்டவேளை சிறுபடையுடன் சிறுவர்களுடனும் உதவி கிட்டும்வரை பாதுகாத்தார். 1901 இல் வெற்றிவீரனாக தாய்நாடு திரும்பினார்.

"சாரணியத்திற்கு துணை" எனும் நூலை பகுதி பகுதியாக 1908 இல் வெளியிட்டார். இங்கிலாந்திலுள்ள பிறவுண்சீஸ் தீவில் 20 சிறுவர்களுடன் சாரணியத்தை 1907 இல் ஆரம்பித்தார். 1908 இல் "இளைஞர் சாரணியம்" என்ற நூலை வெளியிட்டார். 1909 இல் இவரது சசோதரி அக்னஸ் முதலாவது பெண் சாரணராகச் சேர்ந்தார். 1910 இல் இராணுவத்திலிருந்து விலகி பெண்கள் சாரணியத்தை ஆரம்பித்தார். ஒலவ் சென் கிளையர் சோம்ஸைத் திருமணம் செய்தார் (1912). இவர்களுக்கு மூன்று குழந்தைகள். இவர் 1920 இல் உலகப் பிரதம சாரணரானார். 1929 இல் "பிரபு" எனும் பட்டம் வழங்கப்பட்டது. தனது இறுதி வாழ்வைக் கழிப்பதற்காக தனக்கு மிகப் பிடித்தமான ஆபிரிக்கக் கென்யா மலை அடிவார ரைஜ்கி கிராமத்திற்கு 1938ம் ஆண்டு சென்றார். 1941 இல் தன் இன்ப வாழ்க்கையைக் கழித்து முடித்து உலகிற்கொரு நல்லியக்கத்தை உருவாக்கிக் கொடுத்த பேடன் பவல் பிரபு இவ்வுலகை நீத்தார்.

### உலக சாரணர் சம்மேளனம் :

1920 இல் உலக சாரணர் சம்மேளம் உருவாகியது. இதன் தலைமை அலுவலகம் சுவிஸ்ஸின் ஜெனீவாவில் உண்டு. இச்சபை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கூடி பன்னிரண்டு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் இந்நிர்வாக சபையின் இருவர் புதிய அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்படுவர். இவ்விருவரும் சாரணிய வளர்ச்சிக்கான பொறுப்பை ஆற்றுப்படுத்துவர்.

### தேசிய சாரணர் சங்கம் :

உலக சாரணர் சம்மேளனத்தின் ஒரு தேசிய சாரணர் சங்கம் இணைவதற்கு பின்வரும் அடிப்படைத் தத்துவங்களை ஏற்கவேண்டும்.

- சமயத்தின் மீது பற்று

- உலக சகோரத்துவம்
- நாட்டுப்பற்று
- பிறருக்கு உதவி செய்யும் தன்மை
- வாக்குறுதிக்கும் விதிக்கும் பணிந்து நடத்தல்
- அரசியலில் தொடர்பின்மை
- தன் விருபத்திற்கேற்ப அங்கத்துவம்
- சுதந்திரமான வாழ்வு

**உலக சாரணிய அங்கத்துவம் :**

உலக சாரணிய இயக்கத்தில் அங்கத்துவம் பெற வருடா வருடம் அங்கத்துவ சந்தா செலுத்தல் வேண்டும் எனத் தெரிந்திருத்தல் வேண்டும்.

# உலக சாரணியம்

| | |
|---|---|
| 1907 இல் | சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1908 இல் | இளைஞர் சாரணியம் நூல் வெளியிடப்பட்டது. |
| 1909 இல் | ஒரு பெண் சாரணர் செல்வி அக்னஸ் B.P. யின் சகோதரி. |
| 1910 இல் | கடற்சாரணியம் பெண்கள் சாரணியமும் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1916 இல் | குருளைச் சாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. |
| 1918 இல் | திரி சாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. |
| 1919 இல் | கில் வெல் பாக் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1920 இல் | ஒரு சாரணர் ஜம்பேறி (லண்டன் ஒலிம்பியர்) உலக சாரணர் சம்மேளனம் உருவாக்கம் |
| 1925 இல் | வலதுகுறைந்தோர் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1930 இல் | உலகப் பிரதம சாரணியம் (சீமாட்டி பேடன் பவல்) |
| 1931 இல் | முதலாவது திரிசாரணர் உலக சம்மேளனம் கூடியது. |
| 1941 இல் | விமான சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1982 இல் | உலக சாரணர் தலைவர்கள் இலக்வல் பாக்கில் முதன் முதல் சந்தித்தனர். |
| 1987 இல் | உலக சாரணர் இயக்கப் பொன்விழா இங்கிலாந்தில் நடைபெற்றது. |

## இலங்கையில் சாரணர் இயக்க வளர்ச்சிபற்றிய சிறுதுளி......

திரு.F.G.ஸ்பேனால் மாத்தளைக் கிறிஸ்தவக் கல்லூரியில் 1910ம் ஆண்டு சாரணியம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. 1914 இல் கலைகைக் மைதானத்தில் மேல் மாகாண ஒன்றுகூடல் இடம்பெற்றது. 1918 இல் கடற்சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது 1921ம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டு திரு. திருமதி. பேடன் பவல் இலங்கைக்கு விஜயம் செய்தார். திரு.புறக் எலியட் பிரதம ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார். முதலாவது தரச் சின்னப் பயிற்சி 1922ம் ஆண்டு நுவரெலியா பீற்றுப் பாசறையில் இடம்பெற்றது. 1930ம் ஆண்டு சாரணர் தலைமையலுவலகம் காலி முகப்பில் பழைய பாராளுமன்றத்தின் முன்னுள்ள பாதுகாப்பு நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1934 இல் திரு. பேடன் பவல் அவர்கள் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்தார். P.M.I.C.H இற்கு அருகில் உள்ள கூம்பின்கேணலில் இலங்கையில் முதலாவது சாரணர் ஜம்பொறி நடைபெற்றது.

திரு. E.W. கன்னக்கா 1984 இல் பிரதம ஆணையாளரானார். இரண்டாவது தேசிய ஜம்பொறி 1962 இல் குதிரையோட்டத் திடலில் நடைபெற்றது. 1982 இல் T. செனிவரத்தின பிரதம ஆணையாளரானார். பேடன் பவலின் 125 வது பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட ஞாபகார்த்த


முத்திரையை வெளியிட்டார். 1983 இல் மூன்றாவது தேசிய ஜம்பொறி அனுராதபுரத்தில் நடைபெற்றது. முதலாவது "இன்டாபா" பாசறை மீரிகமலில் 1991ம் ஆண்டு நடைபெற்றது. ஐந்தாவது தேசிய ஜம்பொறி 1998ம் ஆண்டு கண்டியில் இடம்பெற்றது.

- *உலகில் 144 அங்கத்துவ நாடுகளில் 2 கோடியே 50 லட்சம் சாரணர் உள்ளனர்.*
- *இலங்கையில் 25 289 சாரணர்கள் உள்ளனர். (1996ம் ஆண்டு தரவுப்படி)*


## உலக சாரணர் தலைமைச் செயலகம் :

1920 – 1958 - இங்கிலாந்து
1958 - 1968 – கனடா ஒட்டாவா
1968 முதல் சுவிலன்ட் ஜெனிவா

உலக சாரணர் இயக்கம்



# இலங்கை சாரணர் சங்க அமைப்பு




ஜெ. லஜீபன்

நானும், பட்சிகளிடத்தும் மற்றும் சீவராசிகளிடத்தும் மிகப் பிரியம் வாய்ந்தவனா - தலினால், ஒரு பட்சி சாத்திரியாக ஆகியிருப்பேன். எப்படி பட்சி சாத்திரியாவது என்பதை நான் கற்றுக்கொள்ளவும் ஆரம்பித்தேன்.

- பவல் -

# அவன்தான் சாரணன்


பொய் பேசான்
புறம் சொல்லான்
பொறுமையுடன் பணிசெய்வான்
வம்பு சொல்லான்
வதை செய்யான்
வலிந்து சேவை புரிவான்

சினங் கொள்ளான்
விரயம் செய்யான்
சிந்தையுடன் சேமிப்பான்
நம்பத் தகுந்தவன்
நாணயமுடையவன்
நயமுடன் பழகும் பிராணிகளின் நண்பன்

மகிழ்ச்சியுடையவன்
மரியாதை கொண்டவன்
மற்றைய சாரணனின் சகோதரன்
பாசம் கொண்டவன்
பற்றுறுதியுடையவன்
பவலின் வழிவந்த பாலகன்
அவன்தான் சாரணன்.

*ஜெ.சஜீபன்*
குருளைச் சாரணர்

# 4th Jaffna Scout Troop - 2000



***Seated*** - 1st Row : Mas.S.Sujan , Mas.T.Pragash, mas.V.Thiluxan, Mas.S.Thinesan, Mas.Y.Ambikesan, Mas.K.Krishanth, Mas.V.Nitharsan, Mas.Y.Abivarman, Mas.K.Nishanthan, Mas.S,Sivathas, Mas.T.Pratheepan

***Sitting*** – 2nd Row Mr.S.Ganga (A.S.L). Mr.S.Kohilan (S.L). Mas. S. Kajanan (Q.M), Mr.A.Srikumaran (Pirincipal), Mas.J.Thaneshkumar (T.L), Mr. P.Maheswaran (Dep. Principal), Mas.V.Kandhappa (A.T.L), Mr M.B.Muththukumaru (G.S.L), Mr M. Jotheeswaran (S.L)

***Standing*** – 3rd Row : Mas.K.Sanchuthan, Mas.V.Vipulan (Bad. Sec. & P.L), Mas S. Barathy (Sec. P.L), Mas.T.Thiriyambagan, Mas.R.Pragash (A.P.L), Mas.R.Mohanraj, Mas N.Aingaresan (A.P.L), Mas K.Bakeerathan (A.P.L), Mas R. Praveen, Mas.T. Hushoth, Mas,V.Benet Piruthiviray (A.P.L), Mas.M.Umaiharan (P.L), Mas V.Thirukkumaran (A,Q.M. & P.L), Mas S.Senthur, Mas S.Sanjayan

***Last Row*** : Mas.P.Pratheepan, Mas S.Sarmilan, Mas J.Sujeevan, MasJ.Lajeevan, Mas.S.Niranjnan, Mas.K.Krishanth, Mas.N.Rahuraj, Mas,J.Sajeevan, Mas.R.Bavaneethan, Mas.R.Nijanthan,Mas.R.Kapilraj, Mas.S. Sabesan, Mas.N.Pirapu, Mas.N.Sivaruban, Mas.S.Kamalaharan

Absentees : Mas.M.Majanthan

# சாரணியம்

நேர்மையின் இருப்பிடம்
நம்பிக்கையின் தனியிடம்
மக்களுக்கு உதவிடும்
எங்கள் சாரணியம்

நேசத்தின் புகழிடம்
மரியாதையின் வதிவிடம்
சிக்கனத்தின் சிறப்பிடம்
எங்கள் சாரணியம்

மகிழ்ச்சியின் பிறப்பிடம்
ஒத்துழைப்பின் முதலிடம்
சகோதரத்தை வளர்த்திடும்
எங்கள் சாரணியம்

போட்டிகளின் முதலிடம்
தலைமைத்துவம் அவர்களிடம்
பேடன் பவல் வளர்த்தெடுத்த
எங்கள் சாரணியம்

கடமையில் கண்ணும்
கண்ணியத்தில் நேர்மையும்
கட்டுப்பாட்டில் பணிவும்
கொண்டது எங்கள் சாரணியம்

**சபாநாதன் பாரதி**
**(அணித்தலைவர்)**

# சமுதாயத்தில் சாரணியத்தின் பங்கு

சாரணியம் றோபேட் ஸ்ரீவின்ஸ் சிமித் பேடன் பவல் பிரபு அவர்களால் 1907ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கமாகும். இது சிறுவர்களைச் சமுயதாயத்தில் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகவும் சேவை மனப்பான்மையுள்ளவர்களாகவும் ஆக்கும். அத்துடன் அவர்கள் தம் கடமை, சமூகக் கடமை, சமயக் கடமை போன்ற கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு எவ்வேளையிலும் ஆயத்தமாக இருக்கச் செய்கின்றது.

சாரணியத்தில் பயிற்றுவிக்கப்படும் பலவிதமான பயிற்சி முறைகளைப் பயில்வதனால் இக்குறிக்கோளை அடைய வழிசெய்கின்றது. சாரணியத்திலுள்ள எல்லலாச் சேவைகளிலும் பார்க்க சமூக சேவையே முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் கூடுதலான மக்கள் இச்சேவையை விரும்புவதில்லை. சாரணன் மட்டும்தான் சமூகப்பணியில் கூடுதல் கவனம் செலுத்துகின்றான். இதனையே சாரணனின் வாக்குறுதி வலியுறுத்தப்படுகிறது. அதாவது “ஒவ்வொருநாளும் ஒரு நற்பணி புரிக” என்றும் “எக்காலமும் பிறருக்கு உதவி புரியவும்” என்றும் கூறுகின்றார். இவ்வாக்குறுதிகளிலிருந்து ஒவ்வொரு சாரணனும் சமூகப்பணியில் ஈடுபடவேண்டுமென்பது தெட்டத் தெளிவாகின்றது.

சாரணர் பயிற்சித் திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட மணித்தியாலங்கள் சமூகசேவை செய்வதன் மூலம் அவன் முதலாம் தர சின்னம், ஜனாதிபதிச் சின்னம் போன்றவற்றைப் பெறுகின்றான். சாரணன் தனித்தோ அல்லது அவனுடைய குழுவோடு சேர்ந்தோ சமூகப்பணிகளில் ஈடுபடலாம். சாரணன் தனது பாசறை வாசகம் சாரணியத் தொழிற்பாடு முதலியவற்றை விட சமுதாயத்திற்கு அவன் செய்யும் தொண்டின் மூலம் அவன் தனது குறிக்கோளை அடைகின்றான்.

சாரணன் தனது பாசறை வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிலைமைகளைச் சமாளித்து சிறந்த முடிவுகளை எடுத்து வெற்றிபெறுவது போல் சமுதாயத்திற்கு அவன் செய்யும் சேவைகளால் சமுதாயம் மட்டும் நன்மை பெறவில்லை. அவன் தனது சுய முயற்சிக்காகவும் தனது சொந்த முன்னேற்றத்திற்காகவும் கிடைக்கக்கூடிய ஒரு அனுபவ ரீதியான ஆற்றலையும் பெறுகின்றான். இவன் சமூகத்திற்குச் செய்யும் சேவையால் நாட்டுமக்கள் நன்மை பெறுவதோடு மட்டுமல்லாமல் நாடும் வளம் பெறுகின்றது. சாரணன் செய்யும் சமூகசேவைகளுக்கு சமுதாயமும் அவனோடு ஒத்துழைப்பதன் நாடு மேன்மேலும் பெருவளர்ச்சி பெறும்.

**“வாழ்க சாரணியம்”**

**“வளர்க அதன் சமுதாயத் தொண்டு”**

தயாளகேசரி ஹரீஷோத்,

# யாழ். இந்துவின் சாரணர்.....

சாரணர் என்போர் தொண்டில் நிலைப்போர்
பூரண மான அன்பில் திளைப்போர்
காரணம் கடமையே கருத்தாய்க் கொண்டோர்
தீரர் களாகக் கண்ணியம் காப்போர்

பேடன் பவலாம் பிரபுவின் பணிப்பில்
நாடத் தன்னை நன்றாய்ப் பயிற்றி
நாட்டை இறையை அரசைப் போற்றி
கேட்டைத் தவிர்த்து கேளீராய் வாழ்வர்

கட்டுப் பாட்டில் தன்னை நடத்தி
இட்டுக் கூட்டாய் இயங்கி எவர்க்கும்
உற்ற போது உதவி உவந்து
பெற்ற பேறில் பெரிதும் களிப்பர்

குருளைகளாக வளர்ந்து நிறை சாரணராய்
பெருகிக் திரிசா ரணர்க ளாகவும்
கருத்துடன் தம்மை வளர்த்து எடுத்து
மருவும் மகத்துவம் மலர மகிழுவர்

பிராணிக ளிடத்தும் பெரிதும் துன்புறும்
காரணி கண்டு கட்டுப் பாட்டுடன்
ஓரணி யாக உடன்படச் சேவை
சீரொடு செய்யும் திருப்தியில் திளைப்பர்

சூழலைப் புரிந்து சுறுசுறுப் போடு
ஏழ்மை இன்றி எத்தொழில் அத்தொழில்
கோழைப் படாது குணமாய்ச் செய்து
தோழமை கொண்டு துணிவொடு இயற்றுவர்

பதட்டப் படாது பலதும் ஆய்ந்தும்
உதடும் செயலும் ஒன்றாய் இணைய
இதமாய்த் துன்புறும் எவரையும் அணுகி
அதனதன் தேவை அறிந்து உதவுவர்

எல்லாத் திறனும் அறிந்தவர் சாரணர்
பொல்லாப் பில்லாப் புனிதனர் சாரணர்
உல்லா சமொடு உலாவுவர் சாரணர்
சொல்லால் எவரையும் தூக்குவர் சாரணர்

உலகோர் குடும்பமாய் ஒன்றுபட உழைப்பவன்
பலபேர் போற்றப் பண்பாய் நடப்பவர்
நலமே பேணும் நல்லவர் தொண்டர்
இலமே என்று இருக்கா மாண்பினர்

இத்தகு சாரணர் இயல்பினைப் போற்றுங்கள்
சித்தம் மகிழச் சிந்தையால் வாழ்த்துங்கள்
மெத்தவும் இந்து மேன்மை அடைந்திட
உத்தம சாரணர் உழைப்பு உதவிடும்

முவிலைச் சின்னமும் முப்பெரும் உறுதியும்
ஆவலைத் தூண்டும் சாரணர் ஆற்றலும்
சீரொடு பொழியும் பற்பல ஆண்டுகள்
பேரொடு இன்னும் பல்கிப் பெருகியே

**ஓர் சாரணன்**

# சாரணனும் சாரணியமும் வளர ........

பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகில், உலகின் ஒப்பற்ற செல்வங்களான இளஞ்சிறார்கள் தமது வாழ்க்கையை வளமபடுத்துவதன்மூலம் இவ்வுலகில் கொட்டிக் கிடக்கும் ஏனைய செல்வங்களையும் தன்னையும் இவ்வுலகிற்கு பயன்படுத்துவதற்காக அவர்களை அர்ப்பணிப்பு நிறைந்த உள்ளத்துடன் வளர்த்தெடுப்பதற்கு சாரணியம் கில்பெல் பேடன் பவல் பிரபுவால் சிறார்களுக்காக அமைக்கப்பட்டு, நூற்றாண்டை நோக்கி நடைபோட்டுக்கொண்டிருக்கையில், தனது எதிர்கால ஏற்றப்பாதையை எவ்வாறு வளமாக அமைக்கவேண்டும் என்பது பற்றிய ஆராய்ச்சிகள் இன்று உலகின் மூலைமுடுக்கெல்லாம் தொடங்கி முளைவிட்ட நிலையில், யாழ்ப்பாணத்தில் நாம் என்ன செய்துகொண்டிருக்கின்றோம் என்று சிந்திக்கும் அவசியம் எழாமல் இல்லை.

யாழ்ப்பாணத்தில் சாரண வளர்ச்சியில், யாரும் மறைத்தோ மறுத்துரைக்கவோ முடியாதவாறு எண்ணற்ற சாதனைத் தடயங்களை மாவட்ட ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும் படைத்து 4வது யாழ்ப்பாணம் சாரணர் துருப்பைச் சேர்ந்த நாம் நூற்றாண்டு சாரணிய வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றுவோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இக்கூற்றை உண்மையாக்க எம்முயற்சியில் சிறிய பங்காக இந்நூலை பல உலக சாரண நூல்களின் சாராம்சமாக, தாம் தெரிந்தவற்றைப் பிறருக்குச் சொல்வதில் மகிழும் எமது துருப்பு சாரணர்களின் அனுபவ தொகுப்புக்களும் இந்நூலை வளம்படுத்திச் சிறப்பாக்குகின்றன.

அவ்வாக்கங்களில் ஒன்றான இதில் முதலில் அளித்த பாசறை வாசத்தை ஆராய்வோம். இவ்வுலகில் இயற்கையோடு இசைந்து வாழப் பழகுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பயிற்சியோடு கூடிய வாழ்வு வெட்டவெளி பிரதேசத்திலே சூழலில் கிடைக்கும் தடிகளையும் தழைகளையும் கொண்டு கூடாரம் ஆக்கி சூழலில் கிடைப்பதை உண்டு சூழலுக்கு கெடுதலின்றி சூழலை படித்து தன்னையும் படிக்க இது சாரணனுக்கு மிகவும் உதவுகின்றது. இதனாலேதான் 1901ல் பேடன் பவல் எழுதிய "சாரணியத்திற்காய துணை" எனும் நூலை மக்களிடையே பெருமதிப்பைப் பெற்று இங்கிலாந்தில் சிறுவர்களின் பாடப்புத்தகமாகவும் ஆக்கப்பட்டது.

பாசறை வாசம் செய்யும் இடம் காலநிலை, சூழலுக்கு ஏற்ற வகையிலும், காலநிலை உன்னைப் பாதிக்காத வகையிலும் (வெள்ளம் தேங்காமல் மேடும், வெயில் மரங்களின் கீழும்) அமைக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக அவ்விடத்தில் அனுமதி பெறுவது மிக முக்கியமாகும். அடுத்ததாக பாசறைக்குத் தேவையான பொருட்களையும் பாசறை நிகழ்ச்சித் திட்டங்களையும், பாசறைக்காலத்தையும் முக்கியமாக கருத்திற்கொள்ளல் வேண்டும். உணவுத்தேவையில் சூழலிலிருந்து உடனடியாகவோ நேரடியாகவோ (செயற்கையாக அன்றி) பெறுவது முக்கியமாகும். இதன்மூலம் இயற்கையின் புதுமைகளை நாம் அறிந்துகொள்ள உதவும். அடுத்து மிக முக்கியமாக சாரணர் பாசறையைத் தூய்மையாக வைத்திருக்கும் பொருட்டு கழிவுப்பொருட்களை இடுவதற்காக 18 அங்குல சதுரமானதும் 02 அடி ஆழமானதுமான குழிகள் தோண்டப்பட்டு, அழுக்கு நீருறிஞ்சும் கிடங்குமேல் புல்லையிட்டு நீர் வடிந்த பின் அப்புல்லை எரித்தும் மூடுவதும் காய்ந்த கிடங்குக்குள் குப்பை கூழங்களையும், தேவையற்ற கழிவுகளையும் சிட்டு மண்படையால் மூடிவிடவேண்டும். இது எதிரி உன்னை கண்டுபிடிக்காமல் இருக்கவும் உதவுவதில் முக்கியமானது.

பாசறைக்குத் தேவையான உணவைத் தயாரிப்பதற்கும், பாசறைத் தீக்கும் எவ்வாறு அடுப்புக்களைத் தயார் செய்வதும் முக்கியமானது. கூடாரத்தினுள் உபயோகிப்பின் சபைத் தீயும், சபைத் தீயிலும் பெரியதும் யாலரும் பயன்பெறத்தக்கதுமான நட்புத்தீயும்,சமிக்கைகளை சமிக்கைத்தீயும் சமையல் செய்வதற்கு சமையல்தீயும் உபயோகிக்கப்படுகிறது.

முதலில் உலர்ந்த குச்சிகளையும், பட்டடைகளையும் குவித்து அதன்மேல் சிறுசிறு குச்சிகளைச் சேர்த்து கோபுரம் போன்று அமைத்து உருவாக்கும் தீ சமையல் செய்வதற்கும் உகந்தது. இவ்வாறு வாழ்க்கைப் பாடங்களை கற்றுத்தரும் பாசறைக்கு சிறார்களை அனுப்பும் பெற்றோர்களுக்கு பேடன் பவல் பிரபு கூறுவது:

"பாசறை வாசம்தான் சாரணியத்திலே சிறுவனுக்கு அதிக கவர்ச்சி தரும் அம்சமாகும். அது சிறுவனுக்கு தேகாரோக்கியத்தை அளிப்பதுடன் சுய நம்பிக்கையையும் ஆதரவையும் போதிக்க அவகாசத்தை உதவுவதுமாகும்.

பாசறை வாசத்தினைச் செய்து செய்து அனுபவம் பெறாத சில பெற்றோர் தம் சிறார்களுக்கு இவ்வாசம் மிகக் கடினமானதாக இருக்குமெனத் தப்பபிப்பிராயங்களைக் கொள்கின்றனர். ஆனால் தம் சிறார் தேகாரோக்கியமுடையோராகவும் ஆண்தன்மை நிரம்பப் பெற்றும் தோழமை உணர்ச்சி பூண்டு குணசீலர்களாகவும் திரும்பி வருதலைக் காணும்போது இத்தகைய பாசறை வாசத்தின் சீர் சிறப்புக்களையும் அதனால் தஞ்சிறார் அடையும் அனுகூலங்களையும் மதிக்காது போகமாட்டார்கள்.

இங்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள வழிகளில் சிறுவர் தம் விடுமுறைகளைக் கழிக்கச் செல்லுங்கால் எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்த முனையமாட்டார்கள் என யான் விசுவாசத்துடன் நம்புகின்றேன்

அடுத்து பாசறை வாசத்தில் தமக்குப் பெரும்பாலும் உபயோகிக்கப்படும் கட்டுக்களும் பயிற்சியின் போது தெரியவேண்டிய கட்டுக்களும் முக்கியமானவையாகும். அவற்றில் நேர்க்கட்டு, துணிக்கட்டு, செம்படவர்முடிச்சு, முளைத்தும்புக் குழைச்சு, உருளும் முடிச்சு, சுருக்குக் குழைச்சு, பன்றியிழுப்பான் முடிச்சு, தீயணைப்போன் நாற்காலி முடிச்சு, நழுவாத சிரட்டை முடிச்சு, சதுரக்கட்டு தொற்று வைத்தல் என்பன எமக்கு முக்கியமானவையாகும்.

இவ்வாறு எண்ணற்ற பயிற்சிகளையும் பண்புகளையும் நாம் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்நானிலத்தின் நற்றலைவர்களாக விளங்குவோமாக !

ஜெ.தனேஸ்குமார்
துருப்புத் தலைவர்
(2000)

# ஹந்தாண மலையில் காணாமல் போனோம்.....

இலங்கையின் சுதந்திரப் பொன்விழா ஆண்டில் நடைபெற்ற 5வது தேசிய ஜம்போறியில் எமது கல்லூரி துருப்பில் இருந்து 21 சாரணர்கள் துருப்புத்தலைவர் தலைமையில் கலந்துகொண்டோம். இந்து சமுத்திரத்தில் இந்தியா சிந்திய கண்ணீர் முத்தான எழிற் கோலங்கள் நிறைந்த மலைநாட்டில் இறுதி இராச்சியமாம் கண்டியில் எமது ஜம்போறி நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

ஜம்போறியில் நடைபெற்ற விஷேட செயற்பாடுகளாக சாரணரின் ஆற்றலையும் வலிமையையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளித்தன. அந்தவகையில் மலையேறலும் இடம்பெற்றது. மலையேறும் யாழ் மாவட்ட சாரணர்களில் இருந்து தகுதியானவர்கள் இரு குழுக்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். குறித்த நேரத்தில் நாம் எமக்குத் தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு (சொற்பவளங்களே, எமது குழுவிடம் இருந்தது) பதினொரு பேர் கொண்ட குழு எமது கல்லூரிச் சாரணன் செல்வன்.ஆ.இளங்குமரன் தலைமையில் புறப்பட்டது. இதே நேரம் மற்றைய குழு உடவத்தகல மலை ஏற்றத்துக்குப் புறப்பட்டுச் சென்றது.

எமது குழுவில் எமது கல்லூரிச் சாரணர்களாகிய இளங்குமரன், சரவணன், நாகரட்ணம், ஆகியோருடன் நானும் இருந்தேன் . ஹந்தாண மலை அடிவாரத்துக்குச் செல்வதற்காக பஸ் வண்டியில் ஏறினோம். எம்மைத் தவிர சுமார் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சாரணர்கள் இணைந்துகொண்டனர். கண்டி மாநகரின் அழகை இரசித்தவாறு இனிய பாடல் ஆடலுடன் பஸ் வண்டி சென்றது. ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது கடல்மட்டத்தில் இருந்து 300m க்கு மேற்பட்ட உயரம் கொண்ட மலைநாட்டில் இப்படித்தான் மலை இருக்கும் என கரும்பலகையில் வெண்கட்டியால் ஏறுமுகமாக, இறக்குமுகமாக கீறும்போது கற்பனையில் கண்ட மலையையும் இரண்டு மலைகளிற்கிடைப்பட்ட பகுதி கணவாய், பள்ளத்தாக்கு எனக் கூறிய வசனநடையையும் மிக நளினமாக இளங்குமரன் கூறி எம்மை வயிறு குலுங்க சிரிக்கவைத்தான்.

தொடங்கினோம்.. எம்முடன் வந்த இரு முஸ்லிம் சாரணர்கள் நெருக்கமாக எம்முடன் கதைத்தனர். அவாகள் சிங்கள சாரணர்களுக்கும் எமக்கும் மொழிபெயர்பாளராகத் தொழிற்பட்டனர். இடையிடையே கைவசம் தயார்ப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலமும் கைகொடுத்தது.

மலையில் ஏறுவதற்கு படிக்கட்டுகளோ, பாதைகளோ இல்லை. நாமே பாதைகளை உருவாக்கி முன்னேறினோம்.. எம்மைப்போல் பல குழுக்களும் மலை உச்சி நோக்கி விரைந்தவண்ணம் இருந்தனர். இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை எல்லாம் நின்று நிதானித்து ரசித்தவண்ணம் விரைந்தோம். நாம் ஏறும் வழிகளில் பற்றைகளில் மறைந்திருநத விலங்குகள் வெருண்டு ஓடின. அவை திடீர் திடீர் என "சரக்... சரக்..." என சருகுகளின் மீது ஓசை எழுப்பி எம் கால்களுக்கிடையால் சிலிர்க்க வைத்து மறைந்தன. சுமார் ஒருமணி நேரத்தின் பின் மிகப் பாழடைந்து சிதைந்து கிடந்த கட்டட அத்திவாரத்தில் ஓய்வுக்காக அமர்ந்தோம்.

எம்முடன் வந்த குழுவில் அரைவாசி சாரணர்கள் தொடர்ந்தும் மலை ஏறினார்கள் யாழ் மாவட்டச் சாரணர் ஐவரும் மட்டக்களப்பு, அம்பாறை, சாரணர் ஏழுபேரும் மீதமிருந்தோம். ஆற அமர இருந்து அவர்களுடன் உரையாடினோம். ஓர் சிங்கள சாரணன் இந்த மலைப்பகுதியில் கண்டி அரசர்கள் தமது ஆட்சிக்காலத்தில் படைப்பயிற்சிகளை மேற்கொண்மனர் எனவும் சிலவேளைகளில் புகலிடம் ஆகப் பயனபடுத்தினர் என்றும் கூறினான். வரலாற்றுப் புத்தகத்தில் வாசித்த நினைவுகள் நிழலாடிச் சென்றன.

ஓய்வை முடித்துக்கொண்டு மீண்டும் புறப்பட்டோம். ஏறுவதற்கு கயிறுகளையும் தண்டத்தையும் உபயோகித்தோம். சாய்வான இடங்களில் நீட்டிக்கொண்டும், வெளித்ததள்ளியும் காணப்பட்ட மரவேர்கள் கைகொகடுத்தன. எம்முடன் வந்த சானக்காவின் முதுகில் தொங்கிய பையில் இருந்த தண்ணீர் போத்தல் நழுவிக் கீழே விழுந்தது.நதம் திரும்பிப் பார்த்தபோது தரையை நோக்கிக் குத்தும் விமானம் போல் கண் இமைக்கும் நேரத்தில் "சர்" என மறைந்தது. தண்ணீரைப் பறிகொடுத்த சானக்கா புலம்பியவாறு வந்தான். அப்போதுதான் உணர்ந்தோம் பள்ளத்தாக்கின் பயங்கரத்தை! நாகரட்ணம் மெல்லிய சரவணனைப் பார்த்து இவனைத் தூக்கிப்போட்டால் எலும்புகூட மிஞ்சாது துகளாகி விடுவானென இளங்குமரன் சொன்னான் "சரவணன் மட்டும் அல்ல எவரைப் போட்டாலும் இந்நிலைதான்" என. தொடர்ந்த எம் பயணம் மதிய உணவுக்காக இடைநிறுத்தினோம்.

வசதியான ஓர் இடத்தில் அமர்ந்தபோது நான் ஓர் பயங்கரத்ததை உணர்ந்தேன். அது என்னவென்றால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு சாரணரையும் காணவில்லை. நாம் மட்டும் குழுக்களில் இருந்து பிரிந்து தனிமைப்பட்டு இருப்பதை உணர்ந்து, எனது குழுவிடம் கூறினேன். அவர்கள் முதலில் நம்பாது பகிடி எனக் கூறினாலும் நிலைமையை அவதானித்து உண்மையை உணர்ந்தனர்.

எங்கும் முண்டியடித்து வளர்ந்திருந்த மரங்களும், அவற்றினை நம்பி செடி கொடிகளைத் தவிர வேறு எவையும் அற்ற பிரதேசமும், சூரிய ஒளியினை உட்புக விடாது வெள்ளிகண்ட பாரிய மரங்களும் எம்மையும் பயம்காட்டி வெருட்டின. மங்கலான வெளிச்சம் கொண்ட இடம். இப்போது ஒவ்வோர் கண்ணுக்கும் நள்ளிரவில் கோம்பயன் மணல் சுடலை போல் தோன்றியது.

சரவணன் "அப்பா அம்மா என்னை வளர்த்து கடைசியில் கண்காணாத இடத்தில் சமாதியாவதாக முடியப்போகுது" எனப் பயம் காட்டினான். முதல் முதலில் வாழ்வில் மத்திய மலைநாட்டில் காலடி வைத்த எம்மை காட்டிலும் ஏனையவர்கள் பயம் அதிகம் கொண்டனர். வந்த வழியே திரும்பிவர அங்கு தார் போட்ட வீதிகளில் நாம் சென்றோம்.. நாம் நிற்கும் இடத்துக்கு வலமாகவா, இடமாகவா? வந்து சேர்ந்தோம் என அறிவதே பெரிய காரியம். திரும்பி வந்தவழி செல்வதை நினைத்தும் பார்க்க முடியாது.

சாரணன் தைரியமானவன் அல்லவா? எதற்கும் தயாரானவன் தானே? இது எமக்கு விடப்பட்ட சவாலாக எடுத்துக்கொண்டோம். மதிய உணவை நடந்தவாறே உண்டோம். நாம் திரும்பி மலையடிவாரத்துக்கு அறிவிக்கப்பட்ட நேரம் முடிவடைய இன்னும் ஒரு மணித்தியாலம்தான் இருந்தது.

நான் கூறினேன் எமது விசிலில் அபாய சமிக்கையை ஊதுவோம் என்று.அது நல்ல யோசனை என தெரிவித்த ரகிமும் சம்பத்தும் விசிலை ஊதினர். அவை மரங்களில் பட்டுத் திரும்பி வந்தன. எமக்கு மரங்கள் எல்லாம் விசிலடிப்பதுபோல் இருந்தது. முயற்சி தொடர்ந்து பயன் கிடைக்கவில்லை. அடர்ந்த காடு அழகின் இருப்பிடம். அவற்றை இரசித்த மனநிலை முற்று முழுதாக விடைபெறவில்லை. எமது கமராக்குள் அழகினை அடக்கிக்கொண்டு நாம் திரும்பத் தொடங்கினோம். திரும்பி வருகிறோம் என்று கூறினாலும் சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லையில் எனும் பழமொழிக்கு இலக்கணமானோம். உடல் களைத்தும் உளம் சோராது திடமாக இருந்தோம்.. இடையில் குறுக்கிட்ட சிற்றருவியின் அழகில் திளைத்தோம். சானக்கா தனக்குத்தான் கடவுள் சிற்றருவியை உருவாக்கி உள்ளார் எனக் கூற, சம்பத் சொன்னான் "அருவியையும் தூக்கி பள்ளத்தில் போட்டுவிடன்" எனக் கூற சானக்கா "நீயே பார் அருவியை முதலில் யாரோ தூக்கி பள்ளத்தில் போட்டுவிட்டார்கள்" எனப் பதிலடி கொடுத்தான்.

எங்கும் வியாபித்திருந்த தாவரங்கள். இடையில் எம் இலக்கை தேடித் தொடர்ந்தோம். எல்லோரும் மிகவும் களைத்து விட்டோம்.. இருந்த உணவுப்பொருட்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன. பசி மேல் எழுந்து

தாண்டவமாடத் தொடங்கியது. சாரணன் மனமகிழ்ச்சியுடையவன் அல்லவா? அவனைத் துன்ப துயரம்தான் என்ன செய்யும் அவளிடம் மண்டியிட்டுக் கொள்ளும். எமது கலகலப்புக் குறையவே இல்லை.

இரவு முழுக்க இங்குதான், எம்மை யார் தேடப்போகின்றார்கள், வேடர் கூட்டத்தில சேரவேண்டியதுதான் என சலீம் கூறினான். ரகீம் சொன்னான் வேடருடன் இளையநீ பொருத்தமானவன் எம்மைச் சேர்க்கமாட்டார்களென அவனைக் கிளறினான். அப்போது "ஆ..." எனும் அலறல் காதின் செவிப்பறையில் ஓங்கி அடித்தது. என்ன எனப் பார்த்தால் வஜீரா எனும் எம்முடன் வந்தவர்களில் இளையவன் அவன் மரவேரைப் பற்றுவதாக எண்ணி வகை தெரியாத பாம்பைப் பிடித்து உந்தி இறங்க அது கைளுடன் வந்து தூக்கி எறியப்பட்டு மலைச்சரிவில் உருண்டோடியது. வஜீரா தப்பியது அருந்தப்புத்தான்.

திடீரென எமக்கு நம்பிக்கை ஒளி தென்பட்டது. மலையில் இருந்து பார்த்தபோது பஸ்வண்டிகள் சிறு நெருப்புப்பெட்டியாகத் தெரிந்தன. அவ்விலங்கை நோக்கி விரைந்திறங்கி னோம். ஒருவாறு நாம் இடத்தை அடைந்துவிட்டோம். எமது தோழர்கள் முகதி இருந்த கலவரமும், சோகமும் அப்போது மறைந்து சென்றி மீற்றர் சிரிப்பு இழையோடி மறைந்தது.

அப்போது நாம் அறிந்தோம் நாம் ஏனையவர்களைவிட மிக அதிக தூரம் சென்றமையை எமக்காக இன்னும் சில நிமிடம் காத்திருந்துவிட்டு பாசறை சென்று எம்மை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட திட்டமிட்டிருந்ததைத் தெரிவித்தனர். மனந்தளராது போராடினால் வெற்றி கிடைக்காமல் போகாது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? பெரும் குதூகல பாடல் ஆடலுடன் பஸ் வண்டி பாசறை நோக்கிப் புறப்பட்டது. ஹந்தாண மலையில் காணமல் போனோம்.. மீண்டு வந்தோம்.

மெ.பாபுஜி
துருப்புத்தலைவர் (1999/2000)

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்.

- திருவருட்பயன் -

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழு
# ஒளிக் கதிர்கள்

1910 அதிபராகவிருந்த திரு..B. சஞ்சீராவ் அவர்களால் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1916 யா/சம்பத்தரிசியார் கல்லூரி, யா/பரியோவான் கல்லூரி, யாழ் /மத்திய கல்லூரி, யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, ஆகிய 5 பாடசாலைகளிலும் காலிறிச்மன்ட் கல்லூரி சாரண ஆசிரியரான திரு.J.V.மெண்டிஸ் அவர்களால் அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கப்பட்டது. 21 சாரணர்கள் எமது குழுவில் முதலில் இருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

*அங்குரார்ப்பணம் செய்து வைத்த திரு J.V.மெண்டிஸ் அவர்களுக்கு 75 வது ஆண்டு காணும் சாரணராகிய நாம் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

1918 கண்டியில் நடைபெற்ற அகில இலங்கைச் சாரணிய ஜம்போறியில் கலந்துகொண்டனர்.

1919 1.10.19 இல் உதவிக் குடியேற்ற சாரண ஆணையாளர் J.H.டிரேசம் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

1921 கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை சாரணிய ஜம்போறியில் எமது குழு கலந்துகொண்டது.

1923 ஓநாயக் குருளையர் ஆரம்பிக்கப்பட்டது. அகில இலங்கை சாரணிய ஜம்போறியில் 8 பேர் பங்குகொண்டனர். எமது சாரண ஆசிரியர் M.சபாரத்தினசிங்கி உதவி மாவட்ட ஆணையாளரானார்.

1925 சென்னையில் நடைபெற்ற உலக சாரணிய ஜம்போறியில் உமது சாரணன் திரு.R.ரங்கநாதன் பங்குபற்றினார். பத்தாவது ஆண்டு பூர்த்தி விழா.

1934 பேடன் பவல் பிரபுவை வரவேற்க அகில இலங்கை சாரணர் மகாநாட்டிற்கு எமது குழு சென்றது.

1935 எமது குழு சிவனொளிபாத மலைக்குச் சுற்றுலாவை மேற்கொண்டது. இருபதாவது ஆண்டு பூர்த்தி விழா

1936 வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சாரணர் குழுக்களுக்கிடையிலான போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றோம், அப்போதிருந்த குழுத் தலைவர் திரு.T.கனகராசா எமக்கு இப்போதும் ஊக்கமளித்து வருபவர். 1992 ஆம் ஆண்டில் பேடல் பவல் தனி விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைத்திருந்தோம்.

இவ்வாண்டில் குருளையர் ஆசிரியராகவிருந்த திரு.V.சுந்தரராசாவை 62 வது சாரணர் ஆண்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்திருந்தோம், இவரால் குருளையர் டைசன் றோற்றம் போல் சுவீகரிக்க வழிகாட்டப்பட்டது. சாரணிய வளர்ச்சிக்கு உதவியவர்களை நாம் பேணி வருகின்றோம்.

1940 திரிசாரணர் குழு ஆரம்பிக்கப்பட்டதையடுத்து 5 திரிசாரணர்கள் கொழும்பிற்குப் பயிற்சிக்குச் சென்றனர். கால் நூற்றாண்டு நிறைவு

1942 2 வது உலக மகா யுத்த காலத்தில் யாழ் பிரதேச மக்களின் பாதுகாப்பிற்கு உதவ, ஆலோசனை வழங்கப் பாதுகாப்புப் பயிற்சியினை சாரணர் பெற்று சமூகத்திற்குச் சேவை செய்தனர்.

1944 1947 திரு C.குமாரசாமி (பழைய மாணவன்) யாழ்ப்பாண சாரணர் சங்கத் தலைவரானார்.

1946 1948 திரு.T.முத்துசாமிப்பிள்ளை (பழைய மாணவன்) யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் ஆனார்.

## சுதந்திரத்திற்குப் பின்

1949 யுத்த காலத்திற்குப் பின்பு சாரணர் அமைப்பு சீர்திருத்தி அமைக்கப்பட்டது.

1950 மாட்சிமை தங்கிய மகா தேசாதிபதிக்கு மரியாதை அணிவகுப்பில் கலந்து சிறப்பித்தோம். "இலட்சியவாதி" நாடகம் இருமுறை சாரணர்களால் மேடை ஏற்றப்பட்டது. 33 வருட நிறைவு

1954 1964 திரு.M.ஸ்ரீகாந்தா (பழைய மாணவன்) சாரணராளர் சங்கத் தரைவரானார்.

1959 யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் E.R.வில்லியம்ஸ் எமது சாரணர் குழுவிற்குப் பயிற்சி அளித்து உதவினார். அவருக்கு 75வது ஆண்டுக் குழுவினரும் சாரணர் குழுத் தலைவரும் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

1960 ஜீப்பிலி மண்டபத்தில் சாரணர் அறை அமைத்தமை ஆனைக்கோட்டையில் முதலாவது சாரணர் முகாம் அமைத்தமை, கச்சேரி பழைய பூய்காவில் சாரணர் விழா.

1961-62 திரு S.V சோமசேகரம் (முன்னாள் சாரண ஆசிரியர்) யாழ் - சாரண சங்கத் தலைவர் மேலும் 4 சிரேஷ்ட சாரணிய அணிகள் திருவாளர்கள் குமாரசாமி அணி, ஜயவீவசிங்கம் அணி, சங்கரப்பிள்ளை அணி, நாகலிங்கம் அணி எனப் பெயரிட்டு திரு.V.சுப்பிரமணியம் கௌரவித்தலுடன் கிளிநொச்சியில் சாரணர் பாசறையும் முதலுதவி வகுப்புக்களையும் நடத்தினர்.

1962 சாரணியர் சங்கப் பொன்விழாவில் பங்குகொண்டோம்.

1963 அனுராதபுர ஜம்பொறியில் கலந்துகொண்டோம். உணவுப் பயிர்கள் பயிரிடுவதில் பங்கு கொண்டோம்.

1964 அகலபாத் அகிலபாரத சாரணர் ஜம்பொறியில் திருவாளர்கள் N.சிவபாதசுந்தரம், K.பிரபாகச்சந்திரன், V.பாலகுமார், V.கார்த்திகேயன், P.சாட்சாதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1968 சாம்ராஜ்ய பிரதம சாரண ஆணையாளர் சேர் சாள்ஸ் மக்னீஸ் எமது கல்லூரிக்கு வருகை தந்தார்.

1970 "கண்டி அரசன் நாடகம்" தேவவன் *யாழ்ப்பாணத்தின் நெறிப்படுத்துகை* யின் ஊடாக மேடையேற்றப்பட்டது. அமரர் மகாதேவன் அவர்களின் சேவையை நினைவு கூர்கின்றோம். அனுராதபுரத்திற்கு பத்துச் சாரணர்கள் துவிச்சக்கரவண்டியில் பயணஞ்செய்தனர்.

1972 காலியில் நிகழ்ந்த வெள்ளிவிழாவின்போது திரிசாரணர்கள் பங்கு கொண்டமை, கண்டியில் சாரணர் சங்கத்தின் வைரவிழாவின்போது எமது சாரணர்கள் பங்கு பற்றினர். அதிபர் அமரர் திரு.E.சபாலிங்கத்தின் சகாப்தம் உருவாகியது.

1973 பிரதம ஆணையாளர் திரு C. M. P வனிகதுங்க எமது குழுவிற்கு வருகை தந்தமை சிறப்புக்குரியது.

1974 பாரிதா பாதத்தில் நிகழ்ந்த 7வது அகில இந்திய ஜம்பொறியில் திரு.த.தில்லைநாதன், செல்வன் விவேகானந்தன் ஆகியோர் பங்கு பற்றினர்.

1975 அகில இலங்கை திரிசாரணர் சம்மேளனத்தின் 26வது கூட்டத்திற்கு 6 திரிசாரணர்களும் 2 ஆசிரியர்களும் பங்கு கொண்டமை.

1976 *வைரவிழாவும் விசேட மலர் வெளியீடும*

1977 எமது சாரணர்கள் பெற்றோருடன் 3 விமானங்களில் கொழும்பு பயணமானார்கள். கொழும்பு இந்துக்கல்லூரிச் சாரணருடன் சிரமதானம் மேற்கொண்டனர். அன்றைய அதிபர் திரு.P.S.குமாரசாமி உப அக்கிராசனராக யாழ் சாரணர் சங்கத்திற்கு பதவியேற்று 1984 வரை பதவிவகித்தார்.

1978 பூநகரி பல்லவராயன்கட்டில் பயிற்சிப்பாசறை மரம் நாட்டுவிழா சாரண ஆசிரியர்களுக்கான உடற்பயிற்சி திரு.மா.புவனேந்திரன் சர்வதேச பயிற்சி 3ம் தரம் திரு.நா.நல்லையா அகில இலங்கை ரீதியில் திரு. P.முருகவேள், திரு. ஏ.கைலாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு 8 வது அகில இந்திய ஜம்பொறியில் கலந்துகொண்டனர் "எண்ணங்கள் மாறலாம்" நாடகம் மேடையேற்றப்பட்டது. சாரணத் தலைவர் பி.ஸ்ரீஸ்கந்தராசா 27வது தேசிய திரிசாரணர் ஜம்போறியில் பங்குகொண்டனர்.

1979 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தில் எமது குழு பற்றி 15 நிமிடம் ஒலிபரப்பப்பட்டது. திரு.நா.நல்லையா உதவி மாவட்ட ஆணையாளர் ஆனார். மரம் நாட்டு விழா. முல்லைத்தீவில் மணவாளன் முறிப்புப்பகுதியில் பாசறை வாசம். திரு.மா.புவனேந்திரன் குருளைச் சங்கச் செயலாளர்.

1980 எமது குழுவின் 7 ஜனாதிபதிச் சாரணர் அகில இலங்கை துவிச்சக்கரவண்டிப் பிரயாணத்தை மேற்கொண்டனர். மரம் நாட்டு விழா சாரணர்களது ஒரு தொடர் நிகழ்ச்சியாக வருடா வருடம் அமைந்தது. இரணைமடுவில் பாசறை வாசம். சாரணர் பிரிவில் சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் முதலுதவிப் பிரிவு விசேட பிரிவாகத் தொழிற்பட்டது. 74வது உயர் பயிற்சி IV (14 – 8- 80 – 23 – 8 – 80) மிரிகமவில் நடைபெற்றது. பயிற்சி பெற்றவர் பி .ஸ்ரீஸ்கந்தராசா போதனாசிரியர் திரு. N .நல்லையா

1981 ஸ்தாபகர் தினம் குழுக்களுக்கிடையிலான போட்டியில் பங்குகொண்டோம். திருவாளர்கள் தவகோபால், T.கனகராசா, A.ஏகாம்பரநாதன் எமது குழுவினர் உதவி மாவட்ட ஆணையாளர்களானார்கள்

1982 கல்லூரி சாரணர் காரியக் குழு கூடி புதிய தெரிவுகள் இடம்பெற்றன. தலைவர் R.நடராசா,செயலர் திரு.வே.ஜோசப், அபாருளர் திரு.சி.முத்துக்குமாரசாமி

3 வது தேசிய சாரணர் ஜம்பொறிக்கு எமது குழுவின் 32 சாரணர்கள் அனுராதபுரத்திற்குச் சென்றதும் சாரணர் மலர் வெளியீடு செய்ததும் குறிப்பிடத்தக்கது. அதில் எமது சாரணர்களான மு.செந்தில்குமார் இ.ராகவன், ம.ரவிக்குமார் முறையே ஜப்பானுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் இந்தியாவிற்கும் ஜம்பொறிகளுக்குச் சென்றனர்.

அனுராதபுரத்தில் யாழ் மாவட்ட ஆணையாளர் திரு.க.சச்சிதானந்தம் அகால மரணமடைந்ததோடு அனுதாபத்திற்காக இடைநிறுத்தி அஞ்சலி செலுத்தி வந்தோம். இவ்வாண்டில் புதிய துன்பமான அம்சமாகும் சாரணர் தேசிய வார அனுஷ்டிப்பு

(66) 70

1984 தேசிய சாரணர் வாரம் சாரணிய தலைமைக் காரியாலயத்தில் அறிவித்தற்படி 1983ம் ஆண்டிலிருந்து அனுஷ்ட்டிக்கப்பட்டு வரப்படுகிறது. தாயார் தினம், வன பாதுகாப்புத் தினம், நட்புத் தினம், அயலவருக்குதவும் தினம், சமய அனுட்டானத்தினம், கணக்கெடுக்கும் தினம், ஒன்றுசேரும் தினம் ஆகியவற்றை உள்ளடக்கிய 7 நாள் விதிப்படி 1984ம் ஆண்டிலிருந்து அனுஷ்ட்டிக்ககப்பட்டு வரப்படுகிறது.

1985 சாரணர் குழுத் தலைவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதான அங்கத்தவராய் இருத்தல் நாட்டின் சூழ்நிலை காரணமாக மாவட்டப் போட்டியில் 5 நிகழ்வுகளில் மட்டும் பங்குகொண்டமை.

1986 உழவு இயந்திரத்தில் யாழ்ப்பாண மாவட்டப் போட்டிக்குச் செல்கின்ற நிலைமை இருந்தது. 70 வது ஆண்டு நிறைவு விழா மலரினையும் வெளியீடு செய்தோம்.

1987 வாழ்க்கைக்கு வளமான மகிழ்ச்சிகரமான இல்லச் சின்னத்தை [Happy Home Badges] எமது சாரணர் பெறத் தொடங்கினர்.

1987 03-08-87 ல் முன்னாள் அதிபர் திரு.E.சபாலிங்கம் அமரரானபோது நினைவு அஞ்சலி செலுத்தினோம்.

1988 24- 4- 88 அன்று குருளையாக, சாரணியராக, சாரண சங்கத் தலைவராக இருந்த அதிபர் P.S.குமாரசாமி அவர்கள் மாரடைப்பால் மரணமானபோது சாரண அணிவகுப்பு மரியாதை மயானம் வரை சென்று செலுத்தியதுடன் கண்ணீர் அஞ்சலியும் வெளியிடப்பட்டது.

1989 பிரதம சாரண ஆசிரியர் கே.வி.மயில்வாகனம் அவர்கள் இவ்வாண்டில் அமரரானபோது நினைவு கூர்ந்தோம்.

1990 யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் அமரர் செல்லையா வரதலிங்கம் [12- 05- 90] அன்று அகால மரணமடைந்தபோது சாரணர்குழு அவரது இல்லமான வேலணைக்குச் சென்று அணிவகுப்பு மரியாதை செய்து (துண்டுப் பிரசுரத்துடன்) கௌரவித்தோம். 1980ம் ஆண்டிலிருந்து 1992ம் ஆண்டு வரை பயிற்சி உதவி மாவட்ட ஆணையாளர் திரு.நா.நல்லையா அவர்கள் 4வது யாழ்ப்பாணத்திற்கு வேண்டியபோது தேவையான ஆலோசனைகளை வழங்கிவரும் ஆலோசகராக இருந்து வந்தார். அவர்களுக்கு கல்லூரி சார்பாக சாரணர்குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

25- 10- 91 அன்று நல்லை ஆதீன முதல்வரின் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

திரு.மா.புவனேந்திரன் முன்னாள் குருளைத் தலைவரும், சாரணர் குழுத் தலைவருமாக இருந்தவர் கிளிநொச்சி மாவட்டத்தில் சாரணியத்தை ஊடுருவச் செய்து அகில இலங்கையில் முதலிடத்தை தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குழுவைப் பெறச் செய்ததுடன், சாரணியம் சார்பாக ஜப்பானுக்கும் வந்து தொடர்ந்து சாதனைகளை நிலைநாட்டி வருகின்றார்.

எமது துருப்பின் ஒரு பிரிவாக கடற் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. திரிசாரணர், குருளைச்சாரணர் என்பனவும் புனரமைக்கப்பட்டது.

1991 யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தின் செயலராக எமது கு.சா.த.பி.ஸ்ரீஸ்கந்தராசா தொழிற்பட்டார். மாவட்ட ஆணையாளரான அமரர் ஆ.சுப்பிரமணியம் அவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு நடைபெற்ற பேடன் பவல் தினத்தில் "கலை இளவல்" எனும் கௌரவப் பட்டம் எமது துருப்புத் தலைவர் கோ.சத்தியனுக்கு அதிபர் K. S. குகதாசனால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. 75 வது ஆண்டினை முன்னிட்டு மாவட்டத்தினால் யாழ் போறி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. 75 வது ஆண்டின் மாவட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக யாழ் கச்சேரி சாரணர் சிலை கௌரவிக்கப்பட்டு அடையாள ஊர்வலமாக இரு பிரிவாக யாழ். மத்திய கல்லூரியை வந்தடைந்து கூட்டத்துடன் முடிவடைந்தது. இந்த ஆண்டுக்கான எமது விசேட சேவையாக போர்க்கால சேவை இடம்பெற்றது.

75 வது ஆண்டு ஆரம்ப நிகழ்வாக எமது கல்லூரியினால் கொடிதினம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. 3 வது தவணையை எமது அதிபர் அ. பஞ்சலிங்கம் சாரணர் தவணையாகப் பிரகடனஞ் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கொடிதினத்தின் முதல் இதழை மில்க்வைற் உரிமையாளர் கலாநிதி க. கனகராசா பெற்றுக் கௌரவித்தார்.

1992 எமது சாரணர் குழுவின் முன்னைய துருப்புத் தலைவர் T. கனகராஜாவை பிரதம விருந்தினராகக் கொண்டு துருப்புத் தலைவர் செல்வன் மு. ஜோதீஸ்வரன் தலைமையில் பேடன் பவல் தினம் கொண்டாடப்பட்டது.

காங்கேசன்துறை மாவட்ட 10 வது ஆண்டு விழாவான சிம் ஜம்பொறியிற்கு யாழ் மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இதற்கு துருப்புத் தலைவராக செல்வன் கோ.சத்தியனும் செயலராக சி.செவ்வேளும், பொருளராக ப.சாய்மருகனும், பண்டகசாலைப் பொறுப்பாளராக மு.ஜோதீஸ்வரனும் எமது துருப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டமை பெருமைக்குரியது. இவ் ஜம்போறியில் செல்வன் க.திருக்குமார் விசேட விருது பெற்றார். சாதனைச் சாரணனாகச் செல்வன் வை.ரமணானந்தசர்மா தெரிவானார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் 80 வது ஆண்டில் 4 வது தேசிய ஜம்பொறி குருநாகலில் நடைபெற்றது. இதில் எமது துருப்பிலிருந்து மு.ஜோதீஸ்வரன், ந.கௌரிதாசன், ஜெ.அச்சுதன், சி.ஸ்ரீகரன், கு.பார்த்தீபன், தி.பெக்ஸ்மன், சி.கங்கா, துசியந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஜம்பொறிக்குச் சென்ற யாழ் மாவட்ட குழுவிற்கு எமது துருப்புத் தலைவர் செல்வன் ஜோதீஸ்வரன் துருப்புத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட ஆணையாளர் திரு.ஆ.சுப்பிரமணியம் அமரரானார். **நாம் வருந்துகின்றோம்** என்னும் அஞ்சலியை வெளியீடு செய்தும் உரிய சாரணிய கௌரவங்கள் கொடுத்தோம். யாழ் இந்துவின் முன்னாள் அதிபர் திரு.என்.சபாரத்தினம் இறையடி எய்தியபோது சாரணர் அவருக்கு செய்யவேண்டிய மரியாதையை இந்துவின் ஏனைய சேவைக் கழகங்களுக்குத் தலைமை வகித்து செயற்பட்டனர்.

1992 திரு.R.ராஜ்குமார், திரு.S.தேவரஞ்சன் ஆகியோர் உ.மா.ஆணையாளர்களாக முறையே நிர்வாகம், குருளையருக்குத் தெரிவாகினர். 07- 02- 92 ல் திரு.ந.மகேந்திரன் யாழ் மாவட்ட ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

1993 எமது கல்லூரிச் சாரணர் துருப்பின் பவளவிழா மலர் 07- 04- 93 புதன்கிழமை துருப்புத் தலைவர் மு.ஜோதீஸ்வரன் தலைமையில் திரு.க.குகபாலன் அவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு வெகு சிறப்பாக நடைபெற்றது.

யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற போர்க்கால சேவைகளிலே எமது குழு முக்கிய பங்கு வகித்து அனைத்துத் தரப்பினரதும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டது. மேலும் வைத்தியசாலையிலே இரவு பகல் பாராது எமது சாரணர்கள் ஓய்வுறக்கம் இன்றி சேவை செய்ததையும் குறிப்பிட வேண்டும். நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தை எமது துருப்புச் சாரணர்கள் சிரமதானப்பணி மூலம் அழகுபடுத்தினர்.

1994 அனைத்துப் பயிற்சிகளையும் கொண்ட பயிற்சிப் பாசறையொன்று ஒரு சில வருடங்களின் பின் நடைபெற்றது. இதன் மூலம் பல சாரணர்கள் திறமைச் சாரணர்களாக தம்மை வளர்த்துக்கொண்டனர்.

இக்காலப் பகுதியில் அகதிமுகாம்கள் சில சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்து, குடிநீர் வசதியும் ஏனைய பிற வசதிகள் சிலவும் எமது துருப்புச் சாரணர்கள் செய்து கொடுக்கப்பட்டது.

தமிழ்க் கல்விமானும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் மரணச் செய்திகேட்டு எமது சாரணர்குழு பேரதிர்ச்சியடைந்து மனம் வருந்தியது. பேராசிரியரின் இறுதி யாத்திரையின் போது எமது துருப்புச் சாரணர்கள் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையும் வழங்கினர்.

1995 வலிகாமம் மேற்குப்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு எமது சாரணர்கள் முகாம்களுக்கு சென்று அவர்கள் திரும்பி தமது சொந்த இடங்களுக்குச் செல்லும்வரை வேண்டிய சகல சேவைகளையும் செய்து கொடுத்தனர். மேலும் வீடுவீடாக சென்று உணவுப்பார்சல்கள் சேகரித்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கினோம். ஆண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வு காரணமாக எமது சேவைகளை தொடர்ந்து செய்ய முடியாது நாமும் இடம்பெயர்ந்து சென்றோம்.

1996 யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வின் பின் எமது குழு மீண்டும் தனது சேவைகளைத் தொடங்கியது. இடப்பெயர்வு காரணமாக எமது வளங்களின் பெரும்பகுதி இழக்கப்பட்ட நிலையில் மீண்டும் குழுவைக் கட்டியெழுப்புவதற்கு பெரும் நிதிப்பற்றாக்குறை நிலவியது. இருந்தும் எமது சாரணர்களின் ஆர்வத்தினால் 4 வது யாழ்ப்பாணம் சாரணர் குழு தலைநிமிர்ந்து வீறுநடை போடத் தொடங்கியது.

1997 ஸ்தாபகர் தினத்தை வழமையாக மாவட்ட சாரணர் சங்கம் அவரது நினைவு தினத்தன்று கொண்டாடி வந்தது. ஆனால் இம்முறை மாவட்டம் கொண்டாட வசதிவாய்ப்புக்கள் இல்லாமையால் ஸ்தாபகர் தினத்தை எமது கல்லூரி சாரணர்கள் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தலைமை ஏற்று எமது கல்லூரியில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

கல்லாரியில் இடம்பெறும் பரிசளிப்புவிழா, ஆங்கிலதினம், தமிழத்தினம் போன்றவற்றிற்கு வழமைபோல் எமது அணிநடைகுழு இம்முறையும் தலைமை ஏற்று சிறப்பாக வழிநடத்தியது.

நாட்டுப் பிரச்சினை காரணமாக தடைப்பட்டிருந்த பாசறைவாசம் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மூன்று தினங்கள் (இரண்டு இரவு உட்பட) கல்லூரியில் நடைபெற்றது. இதன் மூலம் பலர் திறமையான சாரணர்களாக உருவாக்கப்பட்டு எமது கல்லூரிச் சாரணர்குழு தொடர்ந்தும் எவராலும் அசைக்க முடியாத மாபெரும் சக்தியாக உலாவரத் தொடங்கியது.

1998 5 வது தேசிய ஜம்பொறி கண்டியில் நடைபெற்றது. மாவட்டகுழுவில் எமது துருப்பிலிருந்து ஆகக்கூடிய அளவு 24 சாரணர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் திரு.மு.க.முத்துக்குமாரு அவர்களும் திரு.மு.ஜோதீஸ்வரன் அவர்களும் மாவட்ட சாரண தலைவர்களாக கலந்து கொண்டனர். ஜம்பொறிக்குச் சென்ற யாழ் மாவட்ட குழுவிற்கு எமது துருப்புத் தலைவர் செல்வன் சி.கங்கா துருப்புத் தலைவராகவும், செல்வன் ர.பிரசாந்தா பொருளாளராகவும் செல்வன்கள் அ.இளங்குமரன்ஈ பொ.முருகதாஸ், மெ.பாபுஜி ஆகியோர் அணித்தலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் எமது துருப்பு பெருமிதம் கொள்கிறது.

நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் மந்திரிமனை எமது துருப்புச் சாரணர்களினால் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது.

எமது கல்லூரிச் சாரணர் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்ட திரு.நா.நல்லையா (L.T/D.T.C) அவர்களின் ஈடுசெய்ய முடியாத மறைவால் அதிர்ச்சியடைந்தோம். எமது அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொண்டோம். அத்துடன் கல்விப்பணிப்பாளர் திரு.சு.இரத்தினராசா அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தியதுடன் இறுதி ஊர்வலத்திலும் பங்குகொண்டோம்.

1999 இவ்வாண்டு பல விருதுகளையும், கலைச்சின்னங்களையும் பெற்றுக்கொண்டோம். ஸ்தாபகர்தின விழா யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.பொ.பாலசிங்கம் அவர்களை கொண்டு சிறப்பாக நடைபெற்றது. நல்லூர் கந்தசுவாமி உற்சவம், ஆடிவேல் ஊர்வலம், நயினை நாகபூசணி அம்மன் ஆலய உற்சவங்களில் திறமையாக சேவையாற்றினோம். குருளைச் சாரணர் மாவட்ட போட்டியிலும் சாரணர் இடையேயான ஸ்தாபகர் தின போட்டியிலும்


பங்குபற்றி கணிசமான இடங்களை தட்டிக்கொண்டோம். இன்றைய காலகட்டத்தில் எமது துருப்பில் 25 சாரணர்கள் முதலாம்தர சின்னத்தை (1st Class) பெற்றுள்ளனர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். கல்லூரி விழாக்களுக்கு அணிவகுப்பு மரியாதையை தலைமையேற்று நடாத்தினோம். (யாழ் மாவட்டத்தில் ஜனாதிபதி விருதுபெற்ற ஐவரில் மூவர் எமது கல்லூரி சாரணர் என்பது மகிழ்ச்சியான விடயமாகும்.) பாசறை நிகழ்வுகளும், வேலணை சாட்டி கடலிலும் வில்லூன்றயிலும் நீச்சல் பயிற்சிகளையும் மேற்கொண்டோம். பழைய சாரணர் பாடத்திட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எமது துருப்பு உள்வாங்கப்பட்டது.

2000 புதிய பாடத்திற்கு அமைவாக விருதுகளையும், கலைச்சின்னங்களையும் பெற்றுக்கொள்ளத் தொடங்கினோம். இம்முறை எமது சாரணர் துருப்பு ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு புத்தாயிரமாண்டின் முதலாவது சாரணர் தினவிழாவாகக் கொண்டாடினோம். விழாவிற்கு முன்னாள் அதிபரும், முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளராகிய திரு.சுடர்.சி.மகேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

**உன்னாலாகாதென்று தோன்றும் வேலையோ, சிரமசாத்தியமான காரியமோ வந்து எதிர்ப்பட்டால் பின்வாங்காதே: அதனை மகிழ்வோடு ஏற்றுக்கொள். அதனைச் சரிவரக் கடக்கக்கூடிய வழியைக் கண்டுபிடிப்பாயாக. பின்பு அதனை ஆற்றாப்புகு. அதனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு ஆற்றத்தொடங்கிவிட்டால் எந்தச் சிரமமும் சிரமமல்லவென்பதை உணருவாய். பிழை செய்துவிட்டால் அதற்காகப் பயப்படாதே.**

**- பிதாமகர் பவல் -**

# 5th National Jamboree's – 1998
## (Kandy – Sri Lanka)



***Sitting*:** (L – R) Mr.M.B.Muthukumaru (G.S.L), Mas.R.Prasantha, Mr.A.SriKumaran (Principal) Mas.S.Ganga, Mr. M. Jotheeshwaran (S.L),

***Standing*** 1st Row : (L – R) Mas. V.Thevakanthan, Mas.M.Sagilendra (Asst.Senior P.L), Mas.M.Babugi (Senior P.L), Mas.V.Kandhappa (P.L), Mas.P.Murugathas (Treasurer), Mas.A.Elankumaran (Q.M), Mas.V.Vipulan, Mas.N.Nagaratanam (Badge Secretary), Mas.S.Barathy

***2nd Row*** : Mas.R.Pragash, Mas.M.Umaikarn, Mas.V.Thirukkumaran (P.L). Mas.S.Kajanan Mas J.Thaneshkumar (P.L), Mas.B.Arulpirashath

யாழ். இந்துக் கல்லூரி சாரணியத்தின்
84வது ஆண்டு நிறைவு விழா
சிறப்புறவும் சாரணியம் சிறந்து வளரவும்
எமது வாழ்த்துக்கள்

Kleen Well
Point Pedro Road,
Jaffna

⌘ பல் கட்ட வேண்டுமா?
⌘ கிளிப் போட வேண்டுமா?

சிறந்த முறையில் பல்கட்டுதல், கிளிப்போடுதல்
ஆகியவை செய்து கொடுக்கப்படுவதுடன்,
உங்கள் கண்களைப் பரிசோதித்துத்
தரமான கண்ணாடிகளை வழங்குபவர்கள்.
உங்கள் தேவைக்காய் என்றென்றும் சேவையாற்றும்

எரிக்கனேஷ்

T.P – 2486
FAX – 2486

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
கிளை : 91, K.K.S.Road,
கொக்குவில்

யாழ் இந்து சாரணர்
குழு பாரினில்
சேவைகள் பல செய்து
மேலோங்கி வளர
எமது நல்வாழ்த்துக்கள்

Scout

மாருதி ரேடிங் சென்ரர்
16A ஸ்ரான்லீ வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 2932

# 4[TH] JAFFNA
# JAFFNA HINDU COLLEGE
# SCOUT GROUP
# 1916 - 2000

| | |
|---|---|
| Patron | A.Srikumaran (Principal) |
| Group Scout Leader | Mr.M.B.Muthukumaru |
| Scout Leader | Mr.M.Jotheeswaran Mr.S.Kokila |
| Asst.Scout Leader | S.Ganga |
| Trainers | M.Babugi |
| | N.Nagaratnam |
| TroopLeader | Mas.J.Thaneshkumar |
| Asst.Troop Leader | Mas.V.Kandhappa |
| Quarter Master | Mas.S.Kajanan |
| Asst.Quarter Master | Mas.V.Thirukkumaran |
| Secretary | Mas.S.Barathy |
| Treasurer | Mas.V.Tevakanthan |
| Community Service | Mas.M.Majunthan |
| Badge Secretary | Mas.V.Vipulan |

எங்கள் வெற்றியாளர்களை ஆசீர்வதியுங்கள்

# குறிஞ்சியிலே ஒரு சங்கமம்

அது ஒரு பனிபெய்யும் மாசிமாத விடிகாலைப் பொழுது. வழமைபோல் சில்லென்ற குளிர்காற்றுடன் பொழுது புலரத் தொடங்கியது, ஆனால் வழமைக்கு மாறாக சில வீடுகளில் ஆரவாரத்துடனும் பெரும் எதிர்பார்ப்புக்களுடனும் பொழுது புலரத் தொடங்கியது. தம்பி இண்டைக்கு கண்டியிலை நடக்கப்போற ஜம்போறிக்குப் போகப்போறான். இது விடியற் காலையிலேயே நித்திரை விட்டெழுந்து பயணச் சாப்பாட்டைச் சமைத்து முடித்துவிட்டு பக்கத்து விட்டு அம்மாமாரிடம் தமது சந்தோசத்தை பகிர்ந்துகொண்ட சில அம்மாக்களின் நெஞ்சங்களில் இருந்து புறப்பட்ட சந்தோச கீதங்கள். சரி அக்கீதங்கள் கிடக்கட்டும்

ஜம்போறி என்றால் என்ன? தேசத்திலுள்ள சகல சாரணர் குழுக்களிலிருந்தும் திரளுகின்ற சாரணர்கள் யாபேரும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் முகாமிட்டு, ஒன்றுகூடி தமது புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் வலுப்படுத்திக் கொள்வதைக் குறிக்கும். குழுக்களுக்கிடையே நடைபெறும் பல்வேறுவிதமான போட்டிகளிலே சாரணர்கள் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டி, அத்தோடு பல திசைகளிலிருந்து வரும் பல்வேறுபட்ட சாரணர்களுடன் பழக வாய்ப்புக் கிடைப்பதனால் பலதரப்பட்ட அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட அரியதொரு வாய்ப்பு யாழ் மாவட்டச் சாரணர்களாகிய எமக்கு இம்முறையும் கிடைத்தது நாம் பெற்ற பெரும்பேறே. இப்படிப்பட்ட இந்த 5வது தே.சா.ஜம்போறி மூலம் கிடைத்த சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

யாழ் மாவட்டத்திலிருந்து 40 சாரணர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஜம்போறிக்குச் செல்வதற்கான பயண ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் ஒரு பெரும்பிரச்சினை குறுக்கே தாண்டவமாடத் தொடங்கியது. அதுதான் நிதிப்பிரச்சினை ஒவ்வொரு சாரணனிடமிருந்தும் போக்குவரத்துச் செலவாக மாவட்டத்தினால் ரூ.6000 கோரப்பட்டிருந்தது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு பெரும் நிதியை திரட்டிக் கொள்வது பல சாரணர்களின் பெற்றோர்களுக்கு முடியாத காரியமாகவே தென்பட்டது. எனவே பல சாரணர்கள் மனம் குழம்பிய நிலையில் தமது நீண்டநாள் கனவான ஜம்போறிக் கனவை நனவாக்க முடியாதோ என்று ஏங்கிக் கொண்டிருந்த இவ்வேளையில் மாவட்ட தலைவர்களால் ஒரு உருப்படியான, சாரணர்களின் மனதிலே தெம்பூட்டக்கூடிய யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. அது யாதெனில் ஜம்போறிக்குச் செல்லும் சாரணர்களின் போக்குவரத்துச் செலவை அரசிடமிருந்து கோருவதென்பதாகும். இதன் பிரகாரம் சகல தரப்பினரிடமும் தொடர்பு கொள்ளப்பட்டது. ஆனால் முடிவு பூச்சியம். இருந்தும் இறுதியாக மனத்தைரியத்துடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளித்தது. இந்த முயற்சியின்போது எமது கல்லூரி அதிபர் திரு.அ.சிறிக்குமரன் அவர்களின் பங்கு மிகப்பெரியது. இருந்தும் மாவட்டத் தலைவர்களின் முடிவு தெளிவாகக் கிடைக்காமையில் புறப்படும் திகதியன்று சாரணர்கள் மனம் குழம்பிய நிலையிலும் நாம் எப்படியும் கண்டி போய்ச் சேருவோம் என்ற மனத்திடத்துடன் பயணப் பொதிகள் சகிதம் எமது கல்லூரி மைதானத்தடியில் குழுமி நின்றார்கள். அதே நேரம் நானும் மாவட்ட ஆணையாளரும் யாழ் செயலகத்திலே எமது பயணத்துக்கான முடிவை எதிர்பார்த்துக்கொண்டு நின்றோம். மணித்தியாலங்கள் சில உருண்டோடின. ஆனால் அதற்குப் பொறுப்பான அதிகாரி இன்னமும் வந்து சேரவில்லை. திடீரென எனக்குள் ஒரு யோசனை தோன்றியது. ஆணையாளரிடம் சொன்னேன் நாம் விமான ரிக்கட் கொடுக்குமிடம் சென்று விசாரிப்போமென்று அதற்கு அவர் சம்மதிக்க இருவரும் அங்கு சென்றோம். அங்கே எமது குழுவுக்கு தலைமை தாங்கியுள்ள உதவி மாவட்ட ஆணையாளரும் வந்திருந்தார். அப்போது எம்மைக்கண்டு ஓடிவந்த சிவில் நிர்வாக அதிகாரியொருவர் பயண ஏற்பாடு எல்லாம் சரி எங்கே சாரணர்கள் எனக்கேட்டார். சாரணர்கள் இல்லாததால் 30 நிமிடநேர அவகாசம் தந்து உடனடியாக பயண ஏற்பாடுகளுடன் வருமாறு கூறினார். நாமும் உடன்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் அங்கே கூடினோம். உடனடியாகவே இராணுவத்தினரின் சோதனைகளை முடித்துக்கொண்டு பெற்றோரிடம் விடைபெற்று பலாலி விமானத்தளம் நோக்கி பேருந்தில் எமது பயணத்தைத் தொடங்கினோம்.

ஒருவாறு பலாலி விமானத்தளத்தை வந்தடைந்த நாம் முதன்முதலில் பலாலி படைத்தளத்துள் காலடி எடுத்து வைத்த பெருமையிலும் தங்குவிடுதியில் இருந்தவாறு விமானத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். சில மணிநேரம் சென்றபின் பேரிரைச்சலுடன் விமானமொன்று தாழப்பறந்துவந்து பலாலி மண்ணை முத்தமிட்டுக் கொண்டது. விமானம் வந்ததும் நாம் அனைவரும் வாகனமொன்றில் ஏற்றப்பட்டு விமான ஓடுபாதைக்கருகே கொண்டு சென்று இறக்கிவிடப்பட்டோம். விமானத்தை இதுவரை குண்டு போடுவதற்காக தாழப்பறக்கும்போதுதான்

எமது சாரணர்கள் நெருக்கமாகப்பார்த்திருப்பார்கள். ஆனால் தற்போது மிக நெருக்கமாக மிகமிக நெருக்கமாக விமானத்தை பார்த்தபடி கிட்ட நெருங்கினோம். திடீரென விமானத்துக்கருகே நின்ற விமானப்படை சிப்பாய் அருகே வரவேண்டாமென சைகைமூலம் தெரிவித்தார். வந்தது கோபம் அவரைக் கொல்ல வேணும்போல் தோன்றியது. என்ன செய்வது விமானத்தில் ஏறிக் கொழும்பு போக வேண்டுமே. எனவே விட்டுவிட்டு வெயிலுக்காக விமானத்தின் செட்டை நிழலிலே ஓடுபாதையில் அமர்ந்துவிட்டோம். சிறிது நேரத்தில் விமான ஓட்டுநர்கள் வந்தபின் நாம் விமானத்தில் ஏறுவதற்கான அனுமதி கிடைத்தது. அத்தனை சாரணர்களும் விமானத்தில் ஏற முண்டியடித்தனர். அவ்வேளையில் ஒரு சாரணனின் மூளை வேறுவிதமாக இயங்கத் தொடங்கியது. தனது ஆராய்ச்சியினை விமானத்தின் விசிறியில் தொடங்கி அதனை சுழற்றும் முயற்சியில் இறங்கினான். இதை அவதானித்த விமானப்பணியாளர் ஒருவர் தனது மொழியில் ஏதோ திட்டித்தீர்த்தான். அதை காதில் போட்டுக்கொள்ளாது (ஏனெனில் மொழி புரியவில்லை) அச்சாரணன் விமானத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். சில நிமிடங்களின் பின் நாம் ஏறிக்கொண்ட விமானம் இரத்மலானை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்துக்கொண்டது. விமானம் பறந்து கொண்டிருக்கும்போது திடீரென எனது காலடியில் ஏதோ தடக்குப்பட்டது நான் குனிந்து பார்த்தபோது அங்கே ஒரு சாரணன் விமானத்திலுள்ள பரசூட் ஒன்றை எடுத்து அதை விரித்து வைத்து தனது பரசூட் பற்றிய அறிவை வளர்த்துக்கொண்டிருந்தான். வேறோரு சாரணன் இருக்கையின் தன்மை பற்றி தனது நுட்பமான மூளையின் மூலம் அறிந்து கொண்டிருந்தான். பல சாரணர்கள் சமூகக்கல்வி பாடத்தில் படித்த இலங்கைத்தீவின் அமைவுபற்றிய தமது அறிவினை விமானத்தின் யன்னல் கண்ணாடிகளின் ஊடாகப் பெருக்கிக்கொண்டிருந்தனர். இது இவ்வாறிருக்கையில் வாய்ப்பேச்சில் வல்லவர்களான நானும் எனது நண்பர்கள் இருவருமாக எமது பேச்சுத்திறமையை விமானப்பணிப் பெண்ணிடம் காட்டிக்கொண்டிருந்தோம். இதன் பிரதிபலனாக ஏனைய சாரணர்களை விட எம்மூவருக்கும் மேலதிகமாக சில சிற்றுண்டி வகைகள் விமானப்பணிப்பெண் மூலம் கிடைத்தன. இவ்வாறு சந்தோசமாகவும் கலகலப்பாகவும் நாம் பயணித்த விமானம் இரத்மலானையை வந்தடைந்தது.

விமான நிலையத்திலிருந்து பேரூந்தில் புறப்பட்ட நாம் இரவு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இராமகிருஸ்ண மிசனில் தங்கிவிட்டு விடிகாலையில் கண்டிநோக்கிய பயணத்தையும் பேரூந்திலேயே தொடர்ந்தோம். பயணத்தின்போது களைப்பு தெரியாமலிருக்க நாங்கள் எங்கள் குரல்வளங்கள் மூலம் பல பாடல்களைப் பாடிக்கொண்டோம். இதன்மூலம் பிரயாணக்களை தெரியாமலேயே எமது ஜம்போறித்திடலான கண்டியிலுள்ள பல்லேகல எனும் பகுதியை வந்தடைந்தோம். அங்கே எமது குழுவைக் கண்டவுடன் ஒரே பரபரப்பு. யாழ் மாவட்ட சாரணர் குழு வந்துவிட்டதென அனேகரும் பேசிக்கொண்டு எம்மைப்பார்க்க வந்தனர். யாழ் மாவட்டத்திலிருந்து வந்ததாலும், தமிழர்களாகப் பிறந்ததாலும் பலர் எம்மை சந்தேகக்கண்களோடே பார்த்தனர். பாசறைப் பகுதிக்குள் நாம் அனுமதிக்கப்படும்போது சாரணர்கள்போல் அனுமதிக்கப்படவில்லை. மாறாக பலத்த சோதனைகளின் பின்பே அனுமதிக்கப்பட்டோம். ஒருவாறு பாசறைப்பதியில் நுழைந்த நாம் எமக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் கூடாரங்களை அமைத்துவிட்டு இளைப்பாறும்போது எமது இனத்துக்குரிய வசீகரத்தன்மையால் அருகில் முகாமிட்டிருந்த சிலாபம் மாவட்ட சாரணர்களை வசீகரித்துக்கொண்டோம். அவர்களின் குழுவில் எமது மொழி தெரிந்த சில சாரணர்கள் இருந்தமையால் எமது உரையாடல் தடையின்றித் தொடர்ந்தது. புரியாத மொழி, முன்பின் தெரியாத இடம் இருந்தும் எமது திறமையான "கைப்பாசை" மூலம் முதல் நாளிலேயே பல சாரணர்களை எங்களின் விசிறிகளாக்கினோம். இவர்களின் துணையுடன் எமது ஜம்போறிக் கனவுகளை நனவாக்க தொடங்கினோம். முதல்நாள் நிகழ்வாக பிற்பகலில் கொடியேற்றத்துடன் ஜம்பொறி ஆரம்பமானது. அன்றே பலருடன் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தது. இருந்தும் மனப்பயத்தால் பொழுதுபட்டவுடனேயே எமது முகாமில் முடங்கிவிட்டோம். அடுத்தநாள் பொழுது சற்று வித்தியாசமாகப் புலர்ந்தது. முதல்நாள் நண்பர்களின் காலை வணக்கத்துடன் இனிமையாக புலர்ந்தது. இதன்மூலம் எமக்கும் துணிவு வந்துவிட்டது. எனவே அன்றுமுழுக்க பல பகுதிகளுக்கும் சென்று வேறுபட்ட பல சாரணத் தோழர்களுடன் உரையாடினோம். பின் மாலை வேளையிலே நாட்டின் பிரபல இசைக்குழுக்களின் இசைமழையினைக்கேட்டு ரசித்தோம். இவ்வாறாக இனிமையாகப் பொழுதுகள் கரையத தொடங்கின. எவ்வாறு நாள்கள் ஓடுகின்றன என்பதே தெரியாது வெகுவிரைவாக ஓடிக்கொண்டிருந்தன. இதற்கிடையில் ஒவ்வொரு நாளும் தலதாமாளிகை, பேராதனைப்பூங்கா, கந்தானமலை, திறந்தவெளிச்சிறைச்சாலை போன்ற பெயர்பெற்ற இடங்களையும் பார்த்து ரசிக்க மறக்கவில்லை. இதற்கிடையில் மலையேறும்போது தொலைந்து பின் மீண்ட சாரணர்கள் என்ற பெருமையை எமது குழுவிலிருந்த சில சாரணர்கள் தமதாக்கிக் கொண்டனர். இவ்வாறு நாட்கள் நகரும்போது எமது குழுவினரின் திறமைகள் சிலவும் சேர்ந்து நகர்ந்து கொண்டிருந்ததனால் நாள் செல்லச்செல்ல எமது முகாம் பகுதிக்கு வரும் வேற்று

சாரணர்களின் எண்ணிக்கையும் அதிகரிகக்த் தொடங்கியது. இதன்மூலம் எமக்கும் பல நண்பர்கள், நண்பிகள் கிடைக்கப்பெற்றனர். இவ்வாறு ஜம்போறிப் பசுமைகளைச் சுமந்துகொண்டிருக்கும்போது எமது ஜம்போறி நாள்களும் விரைவாக ஓடி முடிவுக்கட்டத்தை அடைந்தது.

அந்த ஜமபோறி நிறைவுதினம் பெரும் வேதனைக்குரிய ஒரு நாளாக மாற்றம் பெற்றது. ஏனெனில் திடீரெனச் சந்தித்த உறவுகள், பின்னிப்பிணைந்த இறுக்கமான நினைவுகள் மற்றும் எம்மை வசீகரித்த நெஞ்சங்கள், எம்மால் வசீகரிக்கப்பட்ட நெஞ்சங்கள் போன்றவற்றை விட்டுப்பிரிந்து செல்லும் நாளாக அமைந்துவிட்டது. இந்த ஜம்போறி நினைவுகளை முடித்துவிட்டுச் செல்ல முடியாது. பல சாரணர்கள் கண்கலங்கி நின்றதையும் காண முடிந்தது. எவ்வாறெனினும் எமது ஜம்போறி முடிவடைந்ததும் நாம் பிரியமனமில்லாது பேருந்திலே கண்டிமண்ணை விட்டு கொழும்பு நோக்கிப்புறப்பட்டோம். கண்டி நோக்கிச் செல்லும்போது பல ஜாலியான பாடல்களைப் பாடி ஆடிக்கொண்டு சென்ற நாம் கண்டி மண்ணை விட்டுப்பிரியும்போது சில சோகப்பாடல்களை ஆனால் ஜாலியாகப் பாடிக்கொண்டு கொழும்பை வந்தடைந்தோம். இரவு இராமகிருஷ்ண மிசனில் தங்கிவிட்டு மறுநாள் காலையில் சிலமணிநேரங்கள் கடைப்பகுதிக்குச் செல்லவென ஒதுக்கிவிட்டு பின் மதியம் மிசனிலிருந்து இரத்மலானை விமானத்தளம் நோக்கிப் புறப்பட்டோம். அங்கே விமானப்படையினரின் சோதனைகளை முடித்துக்கொண்டு தங்குவிடுதியில் தங்கியிருந்தபோது என்னிடம் வந்த ஆணையாளர் "தம்பி பிளேனிலை சீற் காணாதாம் அதனால் நான் கொழும்பில் தங்கிவிட்டு இரண்டுநாள் கழித்து வாறன். நீங்கள் கவனமாக போய்ச்சேருங்கோ என்றார். நானும் என்னசெய்வது சம்மதித்துவிட்டேன். பின் அவர் நின்று எம்மை வழியனுப்பிவைத்துவிட்டுச் சென்றார். பின்பு விமானத்திலேறி பலாலி நோக்கி எமது பயணத்தைத் தொடர்ந்தோம். போகும்போதே அனேக சாரணர்கள் விமானம் பற்றிய தமது அறிவைப் பூரணப்படுத்தியிருந்ததனாலும், ஜம்போறிக் களைப்பாலும் கூடியளவுநேரம் அமைதியாகவே இருந்தனர். இவாறு விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த நாம் ஏதோவொரு இனம்புரியாத மகிழ்ச்சியுடன் பேருந்திலேறி யாழ் நோக்கி பயணமானோம். பலாலி வீதி வழியே யாழ் வரும்போதே பல தெரிந்த முகங்களைக் கண்டு எமது சந்தோசத்தை கைதட்டல் மூலமும், கைகாட்டல் மூலமும் வெளிப்படுத்திக்கொண்டு யாழ் மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்தோம். அங்கே எமது வருகையை எதிர்பார்த்துக்கொண்டு அனேகரின் பெற்றோர்கள் காத்திருந்தனர். அதேபோல் எம்மிலும் சிலர் பெற்றோரை எதிர்பார்த்திருந்தனர். எனவே இருவரின் நினைவுகளும் ஒன்றோடொன்றுசேர சாரணர்கள் ஒவ்வொருவராக எம்மிடம் விடைபெற்றுக்கொண்டு தமது பெற்றோருடனும் தமது ஜம்போறி நினைவுகளுடனும், அடுத்துவரும் ஜம்போறியிலும் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்துடனும், வீடுகளிலுள்ள ஏனைய உடன்பிறப்புக்களை நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

## Growing together

**சி.கங்கா**
**உதவிச்சாரணத் தலைவர்**

ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ
ஞானகுரு புகழினை நாம் வகுக்கலாமோ

- பாரதியார் -

# யாழ் மாவட்டத்துக்கு வழிகாட்டிகளின் வருகை

சாரணர் இயக்கம் என்ன நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ அதே நோக்கிற்காக யுவதிகளிற்குச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கோடு வழிகாட்டிகள் இயக்கமான சாரணர் இயக்கத்தின் சகோரத்துவ இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சாரணர் தந்தை றோபேட் ஸ்ரீவின்ஸ் சிமித் பேடன் பவல் அவர்களது பாரியார் லேடி பேடன் பவல் அவர்களால் வழிகாட்டிகள் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சாரணியர் இயக்கமானது யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதாம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து வந்த செல்வி றொபோதம் (ROBOTHAM) என்பவரால் சாரணியர் இயக்கம், அதன் பிரயோசனங்கள், அதனால் வரக்கூடிய நன்மைகள் அதிற் காணப்படும் கவர்ச்சி போன்ற விடயங்களை யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலே விளக்கமளித்தார். உடனடியாகவே இருபது இளம் பெண்கள் ஓர் குழுவாகக் கூடி சேரத் தீர்மானித்தனர். இவர்களைக் கொண்டு முதலாவது யாழ்ப்பாணமாக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பதிவுசெய்து இயங்கத் தொடங்கியது.

இந்நற்செய்தியைத் தொடர்ந்து உடுவில் மகளிர் கல்லூரி புதுவித காக்கிச் சீருடையுடன் புதுப்பொலிவுடன் இரண்டாவது யாழ்ப்பாணமாகப் பதிவு செய்து இயங்கத் தொடங்கினர். வேம்படி மகளிர் கல்லூரியும் தாமாக முன்வந்து இருபது பெண்களைத் தேர்ந்தெடுத்து சாரணர் தந்தையும், சாரணியர் தாயும் பிறந்த இரண்டாம் மாதம் இருபத்தியிரண்டாம் திகதி மூன்றாவது யாழ்ப்பாணமாகப் பதிவு செய்தது.

இதற்கிடையில் இரண்டாவது யாழ்ப்பாணச் சாரணியர் குழுவைச் சேர்ந்த அரியம்மா ஹட்சன் கிணற்றுக்குள் விழுந்த பெண்ணொருத்தியைக் காப்பாற்றிச் செய்தித்தாள்களில் தலையங்கங்களில் இடம்பிடித்து சாரணயர் இயக்கத்தின் புகழ் மேலும் பரவச் செய்தார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு நாலாவது யாழ்ப்பாணமாக இராமநாதன் கல்லூரி பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தியெட்டாம் ஆண்டு முடியுமுன் எல்லாமாக எட்டுச் சாரணியர் சங்கம் உருப்பெற்றிருந்தன.

வழிகாட்டிகள் இயக்கமானது தனக்கென ஓர் அபிமானம் பெற்றவுடன் அதில் இருக்கும் அங்கத்தவர் தொகையும் அதிகரித்தது. பதினொரு வயதுக்குட்பட்டவர்களுக்காக ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. இதனால் பாடசாலைகளில் "பிறவுனியர்" கூட்டங்களும் "றேஞ்சர்" கூட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. இதன் விளைவாக பிறவுனியர் சாரணியர் அங்கத்தில் சேரவும் சாரணியர் பதினெட்டு வயதை எட்டியதும் "றேஞ்சர்" குழுவிற் சேரவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

"பிறவுனியர்", "சாரணியர்", "றேஞ்சர்" ஆகிய எல்லோரும் சேர்ந்து ஒன்றுகூடி முதன்முறையாக ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி நான்காம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி மாபெரும் அணிவகுப்பை நடத்தினர்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தியேழாம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி வழிகாட்டிகள் இயக்கத்துக்குப் பல வித்துகள் வளர்வதற்குக் காரணமான நாள் அதாவது பத்துசாரணியர் வேம்படி மகளிர் கல்லூரியில் நடந்த முதல் மாடி வீட்டுப்பாசறையில் கலந்து கொள்ளும் பெருமை பெற்றனர் என்ற செய்தி தூரத்தே நெடுந்தீவு, வேலணை போன்ற இடங்களில் பரவி அங்கு உள்ள பெண்களின் ஆர்வத்தைத் தூண்டியதால் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதில் எல்லாமாக இருபத்தைந்து சங்கங்கள் ஆகப்பெருகியது. அகில இலங்கைச் சாரணியர்களின் மகாநாடு முதல்முறையாக யாழ்ப்பாணத்தில், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலே ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்திரண்டாம் ஆண்டு நடைபெற்றது. இதில் தென்னிலங்கையில் இருந்து பல தலைவர்கள் பங்குபற்றினார்கள்.

இவர்களும் சாரணர் இயக்கம் போன்றே சின்னங்கள் செய்தல், சகோதரத்துவம் என்பவற்றைக் கொள்கைகளாகக் கொண்ட சாரணர் சகோதரத்துவ இயக்கம், இவ் இயக்கத்தின் மூலம் மாணவிகள் தமது தலைமைத்துவப் பண்பையும் ஆளுமையையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துச் சமுதாயத்தில் தனது சொந்தக் காலில் நிற்பதற்குப் பெரிதும் பக்கபலமாக நிற்கின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் இருவரை அண்ணளவாக எழுபது சாரணியர் சங்கங்கள் இருப்பது பெருமைக்குரியதாயினும் இவ் இயக்கத்தினூடு மாணவிகள் உச்சப் பயனைப் பெறுவதும் வழங்குவதும் தற்போது குறைவாக உள்ளது வேதனைக்குரியதாகும். மாணவிகள் இச் சாரணியர் இயக்கத்தின் மகிமையை உணர்ந்து திறம்படச் செயற்படவேண்டும்.


"வாக்குறுதியை உலகெங்கும் பரப்பித் தொண்டு ஆற்று"

பவழவிழா மலரிலிருந்து
மு.ஜோதீஸ்வரன்

# President Scouts - 1999



**Mas. A.Elankumaran**



**Mas. P. Murugathas**



**Mas . M. Babugi**



**Mas. M . Sagilendira**

## எமது குழுச்சாரண ஆசிரியர்கள்

| | |
|---|---|
| 1916 – 17 | திரு, V.கதிர்காமநாதன் |
| 1918 – 19 | திரு.M.சபாரத்தினசிங்கம் |
| 1920 – 22 | திருS.P.இராசையா |
| 1923 – 57 | திரு, K.V.மயில்வாகனம் |
| 1958 – 68 | திரு.T.சிவராசா |
| 1969 – 78 | திரு.N.நல்லையா |
| 1979 | திரு.M.புவனேந்திரன் |
| 1980 – 92 | திரு.Pஸ்ரீஸ்கந்தராஜா |
| 1993 | திரு.K.விக்னேஸ்வரன் |
| 1994 -- | திருM.B.முத்துக்குமாரு |

## உதவி சாரண ஆசிரியர்கள்

| | |
|---|---|
| 1916 | திரு.K.கந்தையா |
| 1918 | திரு.S.V.சோமசேகரம் |
| 1923 | திரு.S.நாகலிங்கம் (குருளையர்) |
| 1936 | திரு.V.சுந்தரராசா |
| 1942 | திரு.S.ஜெயவீரசிங்கம் |
| 1949 | திரு.L.பெர்னாண்டோ |
| | திரு.S.தியாகராசா |
| | திரு.M.மகாதேவன் |
| 1956 | திரு.P.S.குமாரசாமி |
| 1957 | திரு.T.சேனாதிராசா |
| | திரு.T.சிவராஜா |
| | திரு.S.முத்துக்குமரன் |
| | திரு.V.சிவசுப்பிரமணியம் |
| | திருN.சிவசுப்பிரமணியம் |
| 1960 | செல்வி.V.சண்முகம் (குருளையர்) |
| | திருமதி.P.சிவலிங்கம் |
| | திருT.சற்குணராஜா |
| | திரு.S.சிவனேஸ்வரராசா (குருளையர்) |
| 1965 | திரு.S.முத்துக்குமாரன் |
| 1967 | திரு.V.S.சுப்பிரமணியம் |
| 1968 | திரு.N.நல்லையா |
| 1970 | திருV.துரைராஜா |
| | திரு.V சுந்தரராசா (குருளையர்) |
| 1971 | திரு.S.ஆறுமுகம் (குருளையர்) |
| | திரு.K.குமாரசிவம் |
| 1972 | திரு.M.ஆறுமுகம் |
| | திரு.R.அருளானந்தம் |
| 1975 | திரு.மா.புவனேந்திரன் |
| | திரு.T.விசாகராஜா |
| 1978 | திரு.P.ஸ்ரீஸ்கந்தராசா |
| 1979 | திரு.S.P.வில்வராஜா |
| | திரு.T.இலங்கேஸ்வரன் |
| 1980 | திரு.S.P.மோகனச்சந்திரன் |
| 1987 | திரு.K.விக்னேஸ்வரன் |
| 1988 | திரு.K.தங்கவேல் |
| 1990 | திரு.A.அரவிந்தன் |
| | திரு.M.B.முத்துக்குமாரு |
| 1998 | திரு.S.கோகிலன் |

## எமது துருப்புத் தலைவர்கள்

1916

1918 செல்வன்.R.ராகவநாதன்

1923 ,, S.ஆறுமுகம்

1936 ,, T.கனகராசா

1942 ,, S.சீனிவாசன்

1949 ,, V.பாலசுந்தரம்

1956 ,, T.சண்முகநாதன்

1957 ,, T.நடராசா

1959 ,, N.கமலநாதன்

1960 ,, S.ராசசுந்தரம்

1963 ,, U.கார்த்திகேயன்

1964 ,, S. சந்திரகாந்தன்

1965 ,, S.அரியரத்தினம்

1966 ,, T.ராஜேஸ்வரன்

1967 ,, M.தாமோதரன்

1968 ,, K.சிவாகி

1969 ,, K.புவிராசசிங்கம்

1970 ,, P.தில்லைநாதன்

,, S.ஹரிகரன்

1971 ,, N.முருகானந்தன்

,, S.அமரநாத்

1972 ,, T.முகுந்தன்

,, A.பிரதாபன்

1973 ,, S.ஜெயபிரதாபன்

,, M.பத்மயோகன்

1974 ,, M.பரமானந்தன்

,, S.விஜயசிறி

1975 ,, S.உதயகான்

,, K.ஹரிச்சந்திரா

,, R.இளசோதிடன்

1976 ,, S.சிதம்பரநாதன்

,, P.பாலேந்திரா

,, M.நகுலேஸ்வரன்

1977 செல்வன்.T.புகமோதிரன்

1978 ,, K.கலாரவி

1979 ,, S.கௌரிபாலன்

1980 ,, K.பத்மலிங்கம்

1981 ,, K.பத்மநாதன்

1982 ,, K.குணநாதன்

1983 ,, S.சற்குணேஸ்வரன்

1984 ,, K.குமாரதாசன்

1985 ,, K.விஜயசுரேஸ்

1987 ,, R.ராகவன்

1988 ,, S.கணேசன்

1990 ,, S.சற்குணராசா

1991 ,, K.சத்தியன்

1992 ,, M.ஜேதீஸ்வரன்

1993 ,, N.கௌரிதாசன்

1994 ,, T.லக்ஸ்மணன்

1995 ,, G.திருக்குமரன்

1996 ,, S.சிறீதர்

1997 ,, S.கங்கா

1998 ,, A.இளங்குமரன்

1999 ,, M.பாபுஜி

2000 ,, J.தனேஸ்குமார்

# Our Queen Scouts and President Scouts

QUEEN SCOUTS

1964 – 1967

S.Janaka
V.Gopalasangarapillai
V.Karthigeya
S.Sathianand
S.Sathiagan
V.Balakumar
K.Sivarajasooriyar
S.Ariarathnam
K.Prabachandran
T.Rajeswaran
S.Mahendrarajah
L.T.Pathmanapan
R.Ratharajah
D.Jogeswaran
S.Nadarajalingam
M.Sivasithambarasan
A.Gnaneswarn
N.Vivekanandan
V.Satkunarajah
A.Kandasamy
N.Jeyaseelan
K.Balasubramaniam

1969

M.Thamotharan
S.Harikaran
S.Amaranath
T.K.Joganathan
R.Manoharan
T.Chadacharam

1970

K.Puvirajasingam
P.Thillainathan

1971

L.Pathmayogan
N.Paramananthan

PRESIDENT SCOUTS

1972

K.Harchandrai
S.Wijayasri

1973

S.Sithamparanathan

1974

T.Puvananthiran
S.Balamaheswaran

1975 – 1976

M.Naguleswaran
S.Uthayanan
V.Skandarajah
R.Rajendan
N.Ketheeswaran
S.Sritharan
S.Gnanasampanthan
K.Jegatheeswaran
K.Kumarathasan

1977

S.Aravinthan
P.Balendran
K.Kalaravi
K.Yogeswaran

1978

S.Gowribalan
S.Thevaranjan
S.Vasanthan
S.Satheeswaran
J.Kailash
P.Muruganel
T.Tharmapalan
P.Indrasri
P.Muthusamy

1980

R.Sugantharaj
B.Nimalan

1981

C.Archuna
A.Arulathanan
K.Kirabaharan
J.Tharmaseelan
S.Sivaganesh

1985 – 1986

K.Vijasuresh
T.Dominic Ravindraj
R.Ragavan

1987 – 1988

P.Ganeshan
T.Chandrakumar

1989 – 1990

S.Satkunarajah

1991 – 1992

K.Sathiyan
V.Ramananthasarma
K.Sathees
P.Senthikumaran
S.Sevvel
V.Mayooran
M.Jotheeswaran
P.Saimaruhan

1993 – 1994

N.Gowrithasan
K.Partheepan
J.Atchuthan
T.Laxmanan

1995 – 1996

T.Niraj

1999

A.Elankumaran
P.Murugathas
M.Babugi

2000

M.Sagilendra

# 4th Jaffna Scout Troop – 2000

## Peacock Patrol

**S.Kajanan (P.L)**
*V.Benet Piruthiviraj (A.P.L)*
M.Umaikaran
R.Praveen
I.Niragulan
N.Jananthanan
N.Nijanthan
J.Sajeeban

## Vulture Patrol

**V.Vipulan (P.L)**
*R.Pragash (A.P.L)*
R.Mohanraj
S.Sarmilan
G.Sanchuthan
K.Kiruththihan
N.Rahuraj
V.Nitharsan
S.Niranjanan

## Cockerals Patrol

**V.Tevaganthan (P.L)**
*S.Bakeerathan (A.P.L)*
M.Rajeenvan
T.Hushoth
S.Sanjayan
T.Pragash
V.Sivaruban
S.Sabesan
M.Thushan
K.Prashath
S.Sujan
Y.Abivarman

## Parrot Patrol

**V.Thirukkumaran (P.L)**
*N.Aingaresan (A.P.L)*
S.Senthur
P.Pratheeban
J.Lajeeban
N.Pirabu
R.Kabilraj
K.Krishanth
S.Thananjayan
V.Janakaran

## Wood peckers Patrol

**S.Barathy (P.L)**
*S.Kamalakaran (A.P.L)*
A.E.Kishok
T.Thiriyambagan
J.Sujeevan
S.Sivathas
T.Pratheeban
Y.Bavaneethan
R.Raviraj

# இதயம் கனிந்த நன்றிகள்

எமது சாரணர் துருப்பின் **84**வது ஆண்டு நிறைவையொட்டி இம்மலரை மிகக் குறுகிய காலத்தில் வெளியிடுகின்றோம்.

இம்மலரை வெளியிடுவதற்கு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கும், ஆசியுரைகள், கட்டுரைகள், கவிதைகளைத் தந்துதவிய அனைத்துள்ளங்களுக்கும், இம்மலர் வெளிவர ஆதாரமாக இருந்த விளம்பரதாரர்கள், அன்பளிப்பாளர்கள் அனைவருக்கும்,

மற்றும் இம்மலரை சிறப்புற மிகவும் குறுகிய நாள்களில் கணனிப் பதிப்பின் மூலம் அச்சிட்டு நூல் வடிவம் கொடுத்த ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்திருக்கும் மற்றும் எமக்குப் பல வழிகளிலும் உதவியோருக்கும், மறைமுக உதவிகளை வழங்கிய அனைவருக்கும், எம்முடன் தோளோடு தோள் நின்று இம்மலரிற்காக அயராது உழைத்த சக சாரணர்கள், முன்னாள் சாரணர்கள் அனைவருக்கும்,

இம்மலரிற்காக மனம் தளராது கைகொடுத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் மீண்டும் மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**85**வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எமது துருப்புக்கு மேன்– மேலும் உங்கள் ஆதரவு கிட்ட வேண்டுமென்பது எமது பேரவாவாகும்

**நன்றி**

**24.10.2K**

**ச. பாரதி**
**செயலர்**

# இதோ! உங்கள் சேமிப்பு வளம்பெற எமது ஆலோசனைகள்

இலங்கையின் அதிசிறந்த வங்கியாக தொடர்ந்தும் இரண்டாவது தடவையாக GLOBAL FINANCE இனால் தேர்ந்தெடுக்கப்பட்ட **கொமர்ஷல் வங்கி** வாடிக்கையாளரின் வைப்புக்களுக்குத் தற்போது வழங்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்:-

**நிலையான வைப்புக்கள்**

- 3 மாதம் – – 14.00%
- 6 மாதம் – – 13.50%
- 12 மாதம் – மாத வட்டி – 12.25%
  – வருட வட்டி – 13.00%
- 24 மாதம் – மாத வட்டி – 12.50%
  – வருட வட்டி – 13.25%
  – முதிர்வு காலம் – 14.125% (3 வருட நிலையான வைப்பின் சிறப்பம்சம் ☎ ஆயுட் காப்புறுதித் திட்டம்.)
- 36 மாதம் – மாத வட்டி – 11.75%
  – காலாண்டு வட்டி – 11.85%
  – அரையாண்டு வட்டி – 12.00%
  – வருடாந்த வட்டி – 12.40%
  – முதிர்வுக் காலம் – 14.00%

**முற்போக்கு சேமிப்புக் கணக்கு திட்டம் (Progressive Saver Account)**

- ஆரம்ப வைப்பு 5000 ரூபா மட்டுமே
- மேலும் வாடிக்கையார்களின் கணக்கிலுள்ள *நாளாந்த நிலுவைகளிற்கு* வட்டி கணக்கிடப்பட்டு *மாதாந்தம் வட்டி* வரவு வைக்கப்படும்
- காலாண்டிற்கிடையில் பற்றுக்கள் இல்லாவிடின் காலாண்டு வட்டியின் 25% மேலதிக வட்டியாக (Bonus) வழங்கப்படும்.

உங்கள் சேமிப்பு தொடர்நது வளர்ச்சியுற அரியதோர் கவர்ச்சிகரமான திட்டம்

*"எம்முடன் இணைந்து உங்களது எதிர்காலத்தைப் பொற்காலமாக மாற்றுங்கள்"*

**மேலும் விபரங்களுக்கு கொமர்ஷல் வங்கியினை நாடுங்கள்...**

"உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்"

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி


# இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

**50, 52, 54 கஸ்தூரியார் வீதி**

**யாழ்ப்பாணம்**

தொலைபேசி : **2988**

- **மிதிவண்டி உதிரிப்பாக இறக்குமதியாளர்கள்**
- **மின் உபகரணங்கள்,**
- **மணிக்கூட்டு வகைகள்,**
- **நீர் இறைக்கும் இயந்திரங்கள்,**
- **பிலிம் றோலஸ், தொலைக்காட்சிப் பெட்டி**
- **வீடியோ, ஓடியோக் கசட்டுக்கள்**



மற்றும் பல்பொருள் விற்பனையாளர்கள்

**உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்!**

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

# ESWARAN TRADERS

General Merchants, Commission Agents.
Transport Agents
Bicycle, Bicycle Spare Parts and Hardwares

**69, KASTHURIYAR ROAD,**
**JAFFNA.**

Tel : 021 – 2813
Fax :021 – 2813
Regd : J/DS/BR/422



# வேணி களஞ்சியம்

சில்லறை, மொத்த வியாபாரம்,
165, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 2046 அல்லது 2661

யாழ் இந்துவின் சாரணர் குழு தனது 84வது அகவை கொண்டாடும் இவ்வேளையில் மேன் மேலும் தனது வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்பணியாற்றி தன்னிகரில்லாத சேவையாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

**வாழ்க சாரணியம்! வளர்க அவர்கள் பணிகள்...**



**84வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் யாழ் இந்துக் கல்லூரி சாரணர் இயக்கம் மேலோங்கி வளர எமது நல்வாழ்த்துக்கள்**

Boy Scouts

**Euroville Engineers**

&

Constructors Pvt.Lt,
Point Pedro Road.
Jaffna

*Best Compliments !*

# RAM
# PRINTERS

- OFF SET Printing
- Computer Reneo Works
- Screen Printing
- Letter Press
- Computer Type Seting , Sentcil Cutting, Scanning and Laser Printing

Other Special Printing Words

- Certificates
- Wedding Cards
- Invitation Cards
- Computer Printing in File Covers
- Printing in Bags

All kinds of Printing contact with,

Ram printers
51 (17) Palaly Road.
Jaffna.

4 வது
யாழ்ப்பாண சாரணர் குழுவை
வாழ்த்துகிறோம்

# சந்தியா மல்ரி கோட்யாட்

"சந்தியா உங்கள் அன்பிற்குரியவர்களுக்கெல்லாம் அன்புக்குரியவர்"

- அன்பளிப்புப் பொருட்கள்
- பாடசாலைப் பொருட்கள்
- கை, மேசை, சுவர் மணிக்கூடுகள்
- பாதணி வகைகள்
- அழகிய வர்ணப்படங்கள்
- வாழ்த்துமடல்கள்
- FEVICRYL CLOTH PAINT

அழகுசாதனப் பொருட்கள்
தையல் பொருட்கள்
எவர்சில்வர் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
சென்ற் வகைகள்

மற்றும்
பட்டின், பக்கிள், கவரிங் செய்து பெற்றுக்கொள்ளவும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

# சந்தியா
## மல்ரி கோட்யாட்

பிரதான வீதி
பண்டத்தரிப்பு.

531 பருத்தித்துறை வீதி
நல்லூர்

பிரதான வீதி
சங்கானை


PRINTED BY: RAM PRINTERS , 51 PALALY ROAD , JAFFNA.